இதழ் 350
02 ஆகஸ்ட் 2025
15 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1

# மீண்டும் புதிய அரசியலமைப்பு







மருதன் ராம்




வேல்ஸில் இருந்து அருஸ்


© 2025 இலக்கு இணையம்

# செம்மணியில் 120க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மீட்பு



யாழ்ப்பாணம் செம்மணி - சித்துப்பாத்தி மனித புதைகுழியில் நாளுக்குநாள் வெளிப்படும் என்புக்கூடுகள் மனித பேரவலத்தின் சாட்சிகளாக மாறுவதாக கருத்துக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அந்தவகையில் சித்துப்பாத்தி மனித புதைகுழியில் இரண்டாம் கட்டத்தின் 27ஆவது நாளாக நேற்று (01) அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் 04 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டதுடன் 07 அகழ்தெடுக்கப்பட்டன. அத்துடன் கடந்த 31ஆம் திகதி மூன்று மனித என்புக்கூடுகள் வெளிப்பட்டன.

அதேநேரம், ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட மனித என்புக் கூடுகளில் மூன்று என்புக்கூடுகள் நேற்று அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, சித்துப்பாத்தி மனிதபுதைகுழியிலிருந்து இது வரை 122 மனித என்புக்கூடுகள் வெளிப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 112 மனித என்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சித்துப்பாத்தி மனித புதைகுழியில் எதிர்வரும் ஞாயிறு மற்றும் திங்கட் கிழமைகளில் ஸ்கேன் இயந்திரத்தை பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவும் பாகிஸ்தானும் உடன்பாடு - ஆபத்தில் இந்தியா



அமெரிக்காவும் பாகிஸ்தானும் ஒரு எரிபொருள் அகழ்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளன, அதில் வொஷிங்டன் இஸ்லாமாபாத்தின் “பெரிய எண்ணெய் படிமங்களை” மேம்படுத்த உதவும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதன்கிழமை(30) தெரிவித்துள்ளார்.

ட்ரம்பின் சமூக ஊடக தளமான ட்ரூத் தளத்தில், ரஷ்யாவுடனான அதன் வர்த்தக மற்றும் பாதுகாப்பு உறவுகளுக்கு பதிலடியாக இந்தியா மீது 25% வரிகளையும் அபராதங்களையும் விதிப்பதாக அவர் கூறிய சில மணிநேரங்களுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

நாங்கள் பாகிஸ்தான் நாட்டுடன் ஒரு ஒப்பந்தத்தை முடித்துள்ளோம், இதன் மூலம் பாகிஸ்தானும் அமெரிக்காவும் தங்கள் மிகப்பெரிய எண்ணெய் படி

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

# பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கப்போவதாக கனடாவும் அறிவிப்பு

பிரான்ஸ் பிரிட்டனை தொடர்ந்து கனடாவும் எதிர்வரும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத்தின் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கப் போவதாகக் கடந்த புதன்கிழமை (30) தெரிவித்துள்ளது.

எனினும் இந்த நடவடிக்கை ஜனநாயக சீர்திருத்தங்களிலேயே தான் தங்கியுள்ளது என தெரிவித்துள்ள கனடா பிரதமர் மார்க் கார்னி ஹமாஸ் இல்லாமல் அடுத்தவருடம் பாலஸ்தீன அதிகாரசபைக்கு தேர்தலை நடத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஐக்கியநாடுகள் பொதுச்சபையின் கூட்டத்தில் கனடாஉத்தியோகபூர்வமாகபாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரையில் யூதகுடியேற்றங்கள் விஸ்தரிப்பு,காசாவில் மோச

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் முக்கிய கலந்துரையாடல்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில், நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்காரவுடன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் குடும்ப உறுப்பினர்கள் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.



இதன்போது, நீண்டகாலமாக சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விரைவாக விடுதலை செய்யுமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில், மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண்பது அவசியமாகும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில், இலங்கை-இந்திய ஒப்பந்தம், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள், ஜே.வி.பி.க்கு பொது மன்னிப்பு மற்றும் போருக்கு பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் செயற்பட்ட 12 ஆயிரம் பேர் விடுவிக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை போன்ற விடயங்கள் இந்த கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டன.

அதன்படி, பல வருடங்களாக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஆபிரிக்காவில் பெருமெடுப்பில் அணுசக்தி திட்டத்தை ஆரம்பிக்கும் ரஷ்யா



ரஷ்ய அணுசக்தி நிறுவனமான ரோசாட்டமின் (Rosatom) துணை நிறுவனம், அடுத்த ஆண்டு கட்டுவதாக திட்டமிடப்பட்டுள்ள முழு அளவிலான அணுசக்தி திட்டங்களின் தொழில்நுட்பங்களை சோதிக்க தான்சானியாவில் ஒரு மிகப்பெரும் யுரேனியம் பதப்படுத்தும் ஆலையை நிறுவியுள்ளது என்று அரசுக்கு சொந்தமான நிறுவனம் புதன்கிழமை (30) தெரிவித்துள்ளது.

மந்த்ரா டான்சானியா லிமிடெட்டின் இந்த முயற்சி தெற்கு தான்சானியாவில் உள்ள எம்குஜு நதி யுரேனியம் திட்டத்தின் (எம்ஆர்பி) ஒரு பகுதியாகும் என்று ரோசாட்டம் தனது


தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# “அறுகம் விரிகுடா இலங்கையில் இருப்பதாக நான் நினைத்தேன்”...: ஒரு சுற்றுலாப் பயணியின் எச்சரிக்கை

“அறுகம் விரிகுடா இலங்கையில் இருப்பதாக நான் நினைத்தேன், ஆனால் அது இஸ்ரேலின் டெல் அவிவில் இருப்பது போல் தெரிகிறது'' என டிஜே டாம் மோனகிள் என்ற சுற்றுலாப் பயணி, இலங்கையின் அறுகம் விரிகுடாவில் இஸ்ரேலிய பிரஜைகள் மற்றும் வணிகங்கள் அதிகரித்து வருவது குறித்து கவலைகளை வெளியிட்டுள்ளார்.

50,000 ஆண்டுகளுக்கு முன்பு அவர்களுக்கு என அறுகம் விரிகுடா வாக்குறுதி அளிக்கப்பட்டதா?” என்று அவர் இன்ஸ்டாகிராமில் பகிரப்பட்ட கணொளியில் கேள்வி எழுப்பியுள்ளார்.


அப்பகுதியில் உள்ள பல



வேறு உணவகங்களின் காட்சிகளைப் பகிர்ந்து கொண்ட டாம் மோனகிள், பல இடங்களில் சிங்களம் அல்லது தமிழுக்குப் பதிலாக ஹீப்ரு மொழி பயன்படுத்தப்படுவதையும்,சில இடங்களில் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளுக்கு ஆதரவான பிரச்சார ஸ்டிக்கர்கள் கூடகாட்டப்படுவதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# இந்தியாவை கருத்தில் எடுக்கப் போவதில்லை - ட்ரம்ப்



...லி ...ின் இ... ...ளை ஒன்றாக வீழ்த்த முடியும் என்று தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இந்தியா மீது 25% வரிகளை அறிவித்துள்ளதுடன்,

மேலும் ரஷ்யாவுடனான தெற்காசிய நாட்டின் பொருளாதார உறவுகளுக்கு அபராதமும் விதித்துள்ளார்.

இந்தியா ரஷ்யாவுடன் என்ன செய்தாலும் எனக்கு கவலையில்லை. அவர்கள் தங்கள் இறந்த பொருளாதாரங்களை ஒன்றாகக் குறைக்க முடியும். எனக்கு கவலையில்லை. நாங்கள் இந்தியாவுடன் மிகக் குறைந்த வணிகத்தையே செய்துவருகின்றோம், அவர்களின் கட்டணங்கள் மிக

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## தீவுச்சேனை ... எங்கே... ஏன்... எப்போது... எவரால்...?

பா. அரியநேத்திரன்




தீவுச்சேனை எனும் ஊர் அல்லது இடம் என்பது வடகிழக்கில் இல்லை, மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த இடம் என சிலர் கூறுவது தவறு.

பொலநறுவை மாவட்டத்தில் வெலிகந்த பிரதேச செயலக பிரிவில் உள்ள ஓர் ஊர் "தீவுச்சேனை" ஆகும்.

பொலநறுவை மாவட்டத்தில் வெலிகந்தயில் இலங்கை இராணுவத்தின் 23 ஆம் படையணி அமைந்துள்ளது. அந்த முகாமின் கண்காணிப்பில் கருணா, பிள்ளையானை இயக்கவே வெலிகந்த இராணுவ முகாமுக்கு தீவுச்சேனை என பெயரிடப்பட்டது. எனவே இராணுவ பாதுகாப்பு கண்காணிப்பில் தமிழ் ஆயுத ஒட்டுக்குழு முகாமாக அமைந்த இடமே தீவுச்சேனை.

2004, மார்ச் 03 அன்று விடுதலைப்புலிகளில் இருந்து கருணா பிளவு ஏற்பட்ட பின்னர் இலங்கை இராணுவ 23,ம் படைப்பிரிவு கருணா குழுவை பாதுகாப்பாக அந்த இடத்தில் வைத்து இயக்கினர், 2005, நவம்பர் 20 அன்று ஜனாதிபதியாக மகிந்த பதவி ஏற்ற பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக செயல்பட்ட அவரின் சகோதரர் கோட்டாபாய கருணாவுடன் நேரடி தொடர்புகளை பேணி பல வசதிகளை வழங்கி கருணாக்குழுவின் இரகசிய முகாமாக தீவுச்சேனை செயல்பட்டது.

கருணாவுக்கு கீழ் நிலை உறுப்பினராகவே பிள்ளையான், இனியபாரதி, உட்பட பல தமிழ் ஒட்டுக்குழுவினர் அங்கு இருந்துதான் மட்டக்களப்பு மாவட்டம், கொழும்பு உட்பட பல காட்டிக்கொடுப்பு, கடத்தல், கப்பம்,கொலை, கடத்தல் போன்ற வேலைகளை முன்எடுத்தனர்.

கருணா லண்டனுக்கு 2007 நவம்பர் 02,ல் சென்ற பின்னர் தீவுச்சேனை முகாம் கருணாவின் கீழ் இருந்து பிள்ளையான் கைமாறியது. ஜனாதிபதி மகிந்த பல

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## செம்மணி மனித புதைகுழியில் மீட்கப்பட்ட சான்று பொருட்கள் மக்களுக்கு காட்சிப்படுத்த அனுமதி



தமிழினத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான மனிதப் பேரவலத்தின் சாட்சியாக நிற்கும் செம்மணி புதைகுழியில் இதுவரை கிடைத்துள்ள தடயப்பொருட்களைப் பொதுமக்கள் பார்வையிட நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இப் பொருட்களை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அடையாளம் காட்ட முடிந்தால் எதிர்வரும் 05.08.2025 செவ்வாய் பிற்பகல் 1.30 முதல் மாலை 5.00 மணி வரை யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்திக்கு சென்று அடையாளம் காட்ட முடியும்.

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

## ஈழத்தமிழரின் தேசிய ஒருமைப்பாடு ஒன்றாலேயே ஈழத்தமிழர்களின் இறைமையை மீளுறுதி செய்ய முடியும்

வர்த்தகப் போரில் இறங்கியுள்ள அமெரிக்க அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் இந்தியாவின் உலகின் தெற்கு (குளோபல் சவுத்) உருவாக்கத்தையே உருக்குலைக்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றார். இந்தியாவின் அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகளுக்கு 25 வீத வரிவிதிப்புடன் கூடவே இந்தியா ரஸ்யாவுடன் இருந்து எண்ணெய் மற்றும் பறக்கும் போர்க்கருவிகள் இறக்குமதி செய்வதற்குத் தனியான தண்டனை வரியும் விதிக்கும் புதிய அமெரிக்க இறக்குமதி வரிக் கொள்கையை நடைமுறைபடுத்தியுள்ளார்.

இந்தியாவையும் ரஸ்யாவையும் தோற்றுப்போகும் பொருளாதாரங்கள் என விமர்சித்துள்ள ட்ரம்ப் இந்தியாவை ரஸ்யாவுடன் சேர்த்துப் புறம்தள்ளிவிட்டு எப்படி குவாட் அமைப்பில் இந்தியாவுடன் இந்து பசுபிக் கடலில் சீனாவின் மேலாதிக்கத்தை எதிர்கொள்வார் என்பது கேள்விக்குறியாக உள்ளது. அதேவேளை ரஸ்யாவுக்கு உக்ரேன் போரை 10 முதல் 50 நாட்களுக்குள் முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்று இறுதி எச்சரிக்கை விடுத்து விளையாடுகிறார் அமெரிக்க அரசத்தலைவர் ட்ரம்ப் எனச் சொன்ன முன்னாள் ரஸ்ய அரசத்தலைவரும் இந்நாள் ரஸ்ய பாதுகாப்புக் கவுன்சிலின் பதில் தலைவருமான டிமிரி மெட்டியாவ் "ட்ரம்புக்கு 1. ரஸ்யா இஸ்ரேலும் அல்ல ஈரானும் கூட அல்ல 2. ஒவ்வொரு புதிய இறுதி எச்சரிப்புக்களும் அச்சப்படுத்துவது மட்டுமல்ல போரை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிகளுமாகும். ரஸ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையில் அல்ல அவருடைய நாட்டுடனேயே. கண்ணை மூடிக்கொண்டு ஜோ (பைடன்) சென்ற பாதையில் செல்ல வேண்டாம்." எனப் பதிவிட்டார்.

இதற்குப் பதிலளிப்பாக அமெரிக்க அரசத்தலைவர் அமெரிக்காவின் இரண்டு அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்களை தேவையான இடங்களுக்கு அமெரிக்கா நகர்த்தி விட்டதாகக் கூறியுள்ளமை, போருக்கு அமெரிக்கா முனைப்புடன் உள்ளதை உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது. இச்சூழலில் உலகின் நான்காவது எண்ணெய் வளமுள்ள கடலாகப் பாகிஸ்தான் கடல்வளம் அறியப்படும் இன்றைய நிலையில் அமெரிக்கா பாகிஸ்தானில் தெற்காசியாவுக்கான மிகப்பெரிய எண்ணெய் சேகரிப்பு மையத்தை அமைப்பதற்கான உடன்படிக்கையைச் செய்துள்ளதன் மூலம் இந்தியா பாகிஸ்தானிடம் இருந்து எண்ணெய் வாங்கும் நிலையை வருவிக்கும் என்று ஆரூடம் வேறு கூறியுள்ளார். இந்நிலையில் சிறிலங்காவுக்கு முதலில் 44 வீதமும் அதாவது சிறிலங்கா அமெரிக்க இறக்குமதிப் பொருட்களுக்கு விதித்து வந்த வரியில் அரைவாசியும் பின்னர் சிறிலங்கா தொடங்கிய பேச்சுக்களின் வழி 30வீதமும் தற்போது 20 வீதம் இறுதி வரியாகவும் விதித்து அமெரிக்க சிறிலங்கா நட்பு நிலையைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

சிறிலங்காவுக்கான இந்த அமெரிக்க ஆதரவுக்கு முக்கிய காரணி இரண்டாவது உலகப் போரில் உலக வான்வழிப்பாதுகாப்புக்கான இயற்கைத் தளமாகப் பிரித்தானியாவுக்குத் திருகோணமலை விளங்கிய போரியல் வரலாற்று உணர்வு என்பது உலகறிந்த விடயம். அத்துடன் சமகாலத்து வான்வழிப்போர் முறைகளின் வளர்ச்சியில் ஈழத்தமிழர் தாயகத்தின் கடல் நில வான் அமைப்புக்கள் குறைந்த செலவிலான வான் உந்துதல்களை மேற்கொள்வதற்கான இயற்கை அமைப்புக்களைக் கொண்டுள்ளதும் முக்கிய விடயம். எனவே மாங்குளம், பரந்தன் காங்கேசன்துறை குறித்த இன்றைய சிறிலங்கா அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டமிடல்கள் உலகின் "பொருத்தி ஆக்கும் சந்தைக்கான" குறைந்த செலவிலான மனிதவலுவையும் குறைந்த செலவிலான ஆய்வுப் பல்கலைக்கழகங்களை வழங்கும் அதே நேரத்தில் ஈழத்தமிழர் தாயகத்தின் கடல் நில வான் இயற்கை நிலைகளை உலகப்பாதுகாப்புக்கான தேவைகளுக்கு உலகிற்கு வழங்குவதான இரட்டை நோக்கைக் கொண்டதாகவே தொடரும் என்பது உறுதி. ஆனால் அந்த வானுக்கு கடலுக்கு மண்ணுக்குச் சொந்தக்காரரான ஈழத்தமிழர்கள் அது தங்களின் சொந்தம் என்கின்ற இறைமையினை வெளிப்படுத்தும் வழக்கில் பழக்கப்படவில்லை. இதுவே 22.05. 1972 முதல் ஈழத்தமிழரின் வானையும் கடலையும் மண்ணையும் ஆட்சிப்படுத்தத் தகுதியற்றவரான சிங்கள பௌத்த சிறிலங்கா குடியரசே ஈழத்தமிழர் தாயகத்தின் ஏகபோக உரிமையாளர்களாக இன்று வரை ஆக்கிரமிக்கும் உலக அனுமதியுள்ளவர்களாகத் தங்களை வெளிப்படுத்தி நிற்கின்றனர். எனவே இந்த மண் எங்களின் சொந்த மண் என்கின்ற ஈழத்தமிழர்களின் வரலாற்று உண்மையை அவர்கள் தங்கள் அடையாளமாக வெளிப்படுத்தி அதனை மீளுறுதி செய்ய வேண்டும். இதற்கு ஈழத்தமிழர்களுடைய தேசிய ஒருமைப்பாடு ஒன்றாலேயே அதனைச் செய்ய முடியும் என்பதை வலியுறுத்துவதே இலக்கின் இவ்வாரக் கருத்தாக உள்ளது.

மேலும் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் இம்மாதத்துக்குள் சிறிலங்கா குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் ஆண்டறிக்கை வெளிவருமுன்பாக ஒருங்கிணைந்த கடிதம் ஒன்றை அனுப்ப வேண்டிய நிலையில் உள்ளனர். இதற்கு ஈழத்தமிழர்களின் தேசிய ஒருமைப்பாடு என்பது உடனடி அரசியல் தேவையாக உள்ளது. இதனை நடைமுறைச் சாத்தியப்படுத்தக் கூடிய முயற்சியாக கொழும்பில் கடந்த வாரம் தமிழ்த்தேசிய பேரவை சார்பில் சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் ஆகியோரும் இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பில் சட்டத்தரணி சுமந்திரன், எஸ் சத்தியலிங்கம், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரும், சிவில் சமுகம் சார்பாக முனைவர் குமாரவடிவேல் குருபரன் ஆகியோரும் கலந்து கொண்டு ஆயத்த முயற்சிகளில் ஈடுபட்டதை இலக்கு வரவேற்கிறது.

அதே வேளை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஈழநாடு நாளிதழ் தனது 31.07.2025 அன்று வெளியான ஆசிரியத் தலையங்கமான "உள்ளக-வெளியக விசாரணை" என்பதில் "கடந்த 16 ஆண்டுகளாக ஜெனிவாவில் முகாமிட்டவர்களால் ஒரு சிறுவிடயத்தைக் கூட நகர்த்த முடியவில்லை என்னும் போது தொடர்ந்து பொய்களைக் கூறிக் கொண்டிருப்பது தவறானது" எனச் சுட்டிக்காட்டியிருப்பதையும் இங்கு மீள் நினைவுபடுத்த வேண்டியுள்ளது." இந்த ஈழநாடு ஆசிரிய தலையங்கம் இலக்கு இதுவரை கூறிவருகின்ற உண்மையை மீள் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் சரியானதை சரியான நேரத்தில் சரியான முறையில் செய்வதற்கு ஈழத்தமிழர்களின் தேசிய ஒருமைப்பாட்டை ஈழத்தமிழர்கள் அனைவரும் வலியுறுத்த வேண்டியது அவசியமாகிறது என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது. அதே நேரம் ஈழத்தமிழரின் தாயக வாழ்விலும் போதிசத்துவ குழந்தைகளாய் புத்தியைப் பயன்படுத்துவதுடன் இதயத்தையும் பயன்படுத்திட வைக்கும் புதிய கல்வி திட்டத்தை உருவாக்குமாறு கடந்த வாரத்தில் சிறிலங்காவின் அஸ்கிரிய மல்வத்த மகாநாயக்க தேரர்கள் சிறிலங்காவின் பிரதமரை நெறிப்படுத்தி உள்ள நிலையில் ஈழத்தமிழர்கள் தங்களின் தேசிய ஒருமைப்பாட்டுடன் தங்களின் வரலாற்றைத் தங்களின் பேராசிரியர்கள் வழியாகவும் தங்களின் தொழிற்கல்வி தேவைகளைத் தங்கள் தொழில்நுட்ப நிபுணர்கள் வழியாகவும் தங்களின் அழகியல் தேவைகள் பரதநாட்டியமும் கர்நாடக சங்கீதமுமல்ல ஈழத்தின் இசை நடன வடிவங்களின் மீளுருவாக்கல் என்பதையும் சிறிலங்காவின் இன்றைய அரசுக்கு வெளிப்படுத்தி அதனை உலகின் கல்விச் சமூகத்துக்கும் தெரிவிக்க வேண்டுமென்பது இலக்கின் அழைப்பாகவுள்ளது.

சிறிலங்காவின் புதிய அரசியலமைப்பு வேகமாக இயற்றப்பட்டு கொண்டிருக்கின்ற இக்காலத்தில் ஈழத்தமிழர்கள் தங்களின் இறைமையையும் தேசிய ஒருமைப்பாட்டையும் உறுதி செய்யாதவரை இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை யாராலுமே நிமிர்த்த முடியாது என்ற உண்மையையும் சிறிலங்காவுக்கும் உலகிற்கும் ஈழத்தமிழர்கள் தேசிய ஒருமைப்பாட்டுடன் வெளிப்படுத்த வேண்டிய இம்மாதத்தில் ஈழத்தமிழர்கள் எவ்வாறு அதனை தொடங்குகிறர்கள் என்பதை மீளாய்வு செய்து பார்த்தால் ஈழத்தமிழர்களின் இயலுமை இயலாமையாக உள்ளமையின் உண்மை தெளிவாகும் என்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது.

**ஆசிரியர்**

# மீண்டும் புதிய அரசியலமைப்பு




ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ‘தேசிய மக்கள் சக்தி’ என்று முலாமிடப்பட்ட ஜே.வி.பி.அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 10மாதங்கள் முழுதாய் நிறைவுக்கு வந்துவிட்டன.

இந்நிலையில் கடந்தவாரம் நடைபெற்றிருந்த பாராளுமன்ற அமர்வுக்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித்.பி.பெரேரா புதிய அரசியலமைப்பு சம்பந்தமாக அரசாங்கம் முன்னெடுக்கின்ற, முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக கேள்விகளை தொடுத்திருந்தார்.



அந்தக்கேள்விகளுக்கு பிரதமர் கலாநிதி. ஹரிணி அமரசூரிய பதிலளித்திருந்தார். அவர், புதிய அரசியலமைப்புக்கான பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், தமது ஆட்சி நிறைவுக்கு வருவதற்குள் புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் கொண்டுவரப்படும் என்றும் உறுதியாக கூறியிருந்தார்.

இதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அநுர அரசாங்கம் புதிய அரசியலமைப்பினை நிச்சயமாக கொண்டுவரும், அதுவொரு ஒற்றையாட்சி அரசியலமைப்பாக இருக்கும் என்றும் தொடர்ச்சியாகவும் திட்டவட்டமாகவும் கூறிக்கொண்டிருக்கின்றார்.

அதுமட்டுமன்றி, ஏற்கனவே மைத்திரி-ரணில் கூட்டாட்சியில் உருவாக்கப்பட்டுள்ள ஒற்றையாட்சியை மையப்படுத்திய புதிய அரசியலமைப்புக்காக இடைக்கால அறிக்கையை அடியொற்றியதாகவே புதிய அரசியலமைப்பு பணிகள் இருக்கப்போவதாக அநுரகுமார ஆட்சிப்பீடத்தில் அமர முன்னதாகவே தெரிவித்துள்ள கருத்துக்களையும் அவர்சுட்டிக் காட்டுகின்றார்.

அந்தவகையில், மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கின்ற அநுர அரசாங்கம் எந்த நேரத்திலும் புதியஅரசியலமைப்பு விடயத்தினை முன்வைக்கலாம், அவ்வாறு முன்வைக்கின்றபோது, இலங்கைத்தமிழரசுக்கட்சி அதற்கு முழுமையான ஆதரவினை வழங்கும். அதனை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் கஜேந்திரகுமார் வலியுறுத்துகின்றார்.

சிங்களத்தில் ‘ஏக்கிய ராஜ்ய’, தமிழில் ஒருமித்த நாடு என்று வார்த்தைகளைப் பயன்படுத்தி இடைக்கால அறிக்கையில் நாட்டின் தன்மை குறித்த விடயத்தில் அரங்கேற்றப்பட்ட நாடகத்துக்கு தமிழரசுக்கட்சியின் தற்போதைய பதில் பொதுச்செயலாளராக இருக்கின்ற சுமந்திரனின் வகிபாகம் மிக முக்கியமானது.

அதே சுமந்திரன் பின்னரான நாட்களில் வழங்கிய செவ்வியொன்றில், புதிய அரசியலமைப்பு பணிகளில் தன்னுடன் பணியாற்றிய சகாவான ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி. ஜயம்பதி விக்கிரமரட்ன தனது எண்பது வயதான தாயார் புதிய அரசியலமைப்பில் நாட்டின் தன்மையானது ஒற்றையாட்சி வடிவமாக இருக்க வேண்டும். அதனை சிங்கள மொழியில் மாற்றுவதற்கு என்று கேட்டுக்கொண்டதாகவும் அதனால் ஜயம்பதி அப்பதத்தினை மாற்றுவதற்கு இணங்கவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அந்தவகையில், ஏலவே தயாரிக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையானது ஒற்றையாட்சி அடிப்படையிலானது என்பது சுமந்திரனே ஏற்றுக்கொண்ட விடயம். இந்த விடத்தில் கஜேந்திரகுமார் வெளிப்படையாக கூறும் விடயம் அரசியலுக்கு அப்பால் யதார்த்தமானது.



இவ்வாறான பின்னணியில் தான் தற்போது, புதிய அரசியலமைப்புக்கான பேச்சுக்கள் மீண்டும் தலைதூக்கியுள்ள நிலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தயாரிக்கப்பட்டுள்ள ஒற்றையாட்சி இடைக்கால அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என்பதில் உடும்புப்பிடியாக உள்ளார்.

ஆனால், சுமந்திரனையும், அவரது அணியினரையும் பொறுத்தவரையில் அநுர அரசாங்கம் புதிய அரசியலமைப்பொன்றை கொண்டு வரப்போவதில்லை என்பதிலும் ஆகவே அதுபற்றி உரையாட வேண்டிய அவசியமே இல்லையென்பதிலும் உறுதியாக இருக்கின்றார் கள்.

இத்தகைய நிலையில் அநுர அரசாங்கம் நிச்சயமாக அரசியலமைப்பு மறுசீரமைப்பையோ அல்லது புதிய அரசியலமைப்பொன்றையோ நிச்சயமாக கொண்டுவரப்போகின்றது என்பது தற்போதைக்கு உறுதிப்படுத்தப்பட்ட விடயமாகின்றது.

அதற்கான பணிகள் சத்தமின்றி ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஜே.வி.பிக்கு மிக நெருக்கமான சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் உள்ளிட்டவர்களை ஒன்றிணைத்து வரைவு தயாரிக்கின்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

அநுர அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில் புதிய அரசியலமைப்பையோ அல்லது அரசியலமைப்பு மறுசீரமைப்பொன்றையோ கொண்டுவர வேண்டிய தேவை உள்ளதென்பது அவர்களால் உணரப்பட்டுள்ளது.



குறிப்பாக, அண்மைக்காலமாக அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள ‘எதிரான மனோநிலை’ நிச்சயமாக எதிர்வரும் காலத்தில் அலையாக உருவாகும். அவ்விதமான சூழலை சமாளிப்பதென்றால் வெறுமனே ‘அநுர’ என்ற ‘தேர்தல் அரசியல் முத்திரையை’ பயன்படுத்தி சமாளிக்க முடியாது.

‘அநுர’ என்ற தேர்தல் அரசியல் முத்திரைக்கு இன்னமும் நாடாளவிய ரீதியில் வரவேற்பு இருந்தாலும் ஜே.வி.பி மற்றும் தேசிய மக்கள் சக்தி முரண்பாடுகளும் செயற்பாடுகளும் கடுமையான சலிப்பை ஏற்படுத்தியுள்ளன.

அவ்விதமான சூழலில் மீண்டும் ‘அநுர’வை முன்னிறுத்தி ஜனாதிபதி தேர்தலொன்றுக்குச் செல்வதாக இருந்தால் அது மிகப்பெரும் சவாலான விடயமாகும். ஜனாதிபதி தேர்தலில் சறுக்கினாலும் அடுத்துவருகின்ற தேர்தல்களின் முடிவுகள் பற்றி கூறவேண்டியதில்லை.

ஆகவே, தான் தென்னிலங்கையில் ஏற்படவுள்ள வாக்குவங்கிச் சரிவை வடக்கு, கிழக்கைப் பயன்படுத்தி ஈடுசெய்வதற்காக அரசியலமைப்பு மறுசீரமைப்பு அல்லது புதிய அரசியலமைப்புக்கான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளது.

அதேநேரம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்பேரவை உள்ளிட்ட சர்வதேசசமூகத்தை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

ஆய்வு அறிக்கை

# விவசாய நிலங்கள் அபகரிப்பு:





# நீதி கேட்க சென்ற மக்களை தாக்கிய காவல்துறை!

கிண்ணியான்

திருகோணமலை மாவட்ட பட்டினமும் சூழலும் உள்ள பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விவசாய பூமியே முத்து நகர் கிராமமாகும்.

இங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரத் தொழிலாக நெற் செய்கை விவசாயம், மேட்டு நிலப் பயிர் செய்கை காணப்படுகிறது. இதில் அண்மைக்காலமாக இம்மக்களது விவசாய பகுதியை தனியார் துறை இரு நிறுவனங்களுக்கு சூரியமின்சக்தி உற்பத்திக்காக சுமார்200 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை வழங்கியுள்ளதுடன் 800 ஏக்கர் நிலப் பரப்பை, கையகப்படுத்தியுள்ளதாக தெரிய வருகிறது.



இலங்கை துறை முக அதிகார சபைக்கு சொந்தமான காணி என கூறி நீதிமன்ற தீர்ப்பு காரணமாக 22 விவசாயிகள் வெளியேற்றப்பட்ட நிலையில், அபகரிக்கப்பட்ட காணிகளை மீளப் பெற்றுத் தருமாறு பல போராட்டங்களை நடத்து வருகின்றனர் மக்கள்.

இந்த நிலையில், 29.07.2025 அன்று திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற போது குறித்த பகுதி விவசாயிகள் மாவட்ட செயலகம் முன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணியை தாண்டியும் தங்களுடைய விவசாய செய்கை காணியை மீள தருமாறு வலியுறுத்தி போராட்டத் தில் ஈடுபட்டனர்.



போராட்டம் நடந்த பகுதியில் காவல் துறை மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பிரதியமைச்சருமான அருண் ஹேமச்சந்திரவை சந்திக்க முயற்சித்த போதும் அவரைச் சந்திக்க முடியவில்லை. மேலும் இந்தப்போராட்டத்தில் நீதி நியாயம் கேட்ட போது பல அப்பாவி விவசாயிகள் காவல்துறையினரால் தாக்கப்பட்டுள்ளனர். இதில் விவசாயியான கே.உவைஸ் என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தான் தாக்கப்பட்டமை தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், ''எனக்கு முத்து நகர் பகுதியில் காணி உண்டு. எனது காணியும் அபகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பிரதியமைச்சர் அருண் ஹேமச் சந்திரவை சந்திக்க சென்றேன்.



இந்த நிலையில் பிரதான நுழை வாயிலை காவல்துறையினர் மூடியிருந்து உட் செல்ல விடாது தடுத்தனர். இதன் போது நீதி கேட்டு போராடினோம். காவல்துறையினர் என்னை தாக்கி விட்டு தூக்கி இழுத்து வீசிய நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது அடிபட்டு உடனடியாக அம்பியுலன்ஸ் வண்டி மூலம் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டேன். இதன் போது ஐந்து நிமிடம் மூச்சு நின்று பெரும் சிரமத்தை இந்த தாக்குதல் மூலமாக அனுபவித்தேன். தற்போது வீடு திரும்பினாலும் நடக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்த அவர், இது போன்ற தாக்குதல்களை காவல்துறையினர் இனி நடத்தக் கூடாது. எம் காணி உரிமைகளை பெறவே போராடினோம்'' என்றார்



அப்பாவி விவசாயிகள் அபகரிக்கப்பட்ட காணிகளை மீள பெற்று தங்கள் வாழ்வாதார தொழிலான நெற் செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்பயற்காகவே அங்கு சென்றிருந்தனர் ஆனாலும் காவல்துறையினர் அராஜகம் அவர்களை விட்டு வைக்கவில்லை.

இவ்வாறான நிலையில், குறித்த தாக்குதலுக்கு உள்ளான விவசாயியை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் நிலாவெளியில் உள்ள அவரது வீட்டுக்கு சென்று நலன் விசாரித்ததன் பின் இவ்வாறு கருத்து தெரிவித்தார் “

மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் முத்துநகர் காணிப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமக்கு நியாயத்தை வழங்க வலியுறுத்தி திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு முன்னால் மேற்கொண்ட அமைதி போராட்டத்தில் அவர்கள் மீது காவல்துறையினர் மேற்கொண்ட தாக்குதல் கண்டிக்கதக்கது.



தாம் ஆட்சிக்கு வந்தவுடன் முத்துநகர் காணிப்பிரச்சினைக்கு தீர்வு பெற்று தருவோம் என கூறிய இந்த அரசாங்கம் தற்போது அந்த விவசாயிகளை எதிர்கொள்ள முடியாமல் காவல் துறையினர் கொண்டு அவர்களை விரட்டுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் முத்து நகர் மக்களின் விவசாய காணிகளில் பல வருடங்களாக விவசாய பயிர் செய்கை செய்துள்ளனர். ஆனால் தற்போது இந்த அரசாங்கம் காணிகளை சூரையாடியே வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர். அந்த அடிப்படையில் அரசாங்கத்தை நம்பிய இந்த முத்து நகர் மக்களை ஏமாற்றியுள்ளனர்.

குறிப்பாக சென்ற ஜனாதிபதி தேர்தலில் பகிரங்கமாக மேடைகளில் சொன்ன விடயம், தான் முத்து நகர் மக்களை எழுப்பப் போவது கிடையாது. அந்த மக்கள் நிம்மதியாக பயிர், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என கூறி விட்டு ஆட்சியமைத்ததன் பின் தற்போது பழி வாங்கப்பட்டு, நீதி மன்ற வழக்குகளுக்கும் முகம் கொடுத்திருக்கின்றனர். தற்போது மக்களை இந்த அரசாங்கம் ஏமாற்றியுள்ளது.

1972 ம் ஆண்டு முதல் இந்த மக்கள் இங்கு விவசாயம் செய்து குடியிருந்து வருகின்றார்கள். ஆனால் எந்த விதியும் இன்றி, வெளியேறச் சொன்னால், எங்கே போவார்கள். அரசாங்கம் சற்று இதனை சிந்திக்க வேண்டும். இந்த அரசாங்கம், சென்ற காலங்களில் மக்களை இனி வீதியில்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# பிள்ளையான் உள்ளே..!




தேசியமக்கள் சக்தி அரசு ஆட்சியமைத்து எட்டுமாதங்கள் நெருங்கும் நிலையில் கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் மக்களுக்கான நன்மைகள் எதுவுமே நடக்கவில்லை.

மட்டக்களப்பில்பண்ணையாளர்களுடைய மேய்ச்சல் தரையாக கருதப்படும் மயிலத்தமடு, மாதவனை முழுமையாக மாடுகளை மேய்க்கும் நிலைமை இல்லை. பெயரளவில் மூவாயிரம் ஏக்கரை வனஇலாகா திணைக்களத்தில் இருந்து விடுவிப்பதாக கூறியபோதும் அது மாடுகளை பூரணமாக மேய்ச்சல் தரையாக அடையாளப்படுத்தப்படவில்லை. இன்னும் அதற்கான நிரந்தர தீர்வு இல்லை.



அதுபோலவே கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக நிர்வாகத்தின் கணக்காளர் நியமனம் 2015, நல்லாட்சிக்காலத்தில் தீர்ந்ததாக கூறி ஏமாறிய விடயம் பூரணமாக ஒரு தனி பிரதேச செயலகமாக தரம் உயர்த்தும் நடவடிக்கை அதற்கான கவன ஈர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்றும், நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தாலும் அது அடுத்த ஆண்டு 2026,ஜனவரி,28, ல் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் ஏமாந்தது கல்முனை தமிழர்களே. அது இதுவரையில் தீர்க்கப்படவில்லை.

திருகோணமலை மாவட்டத்திலும் வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தொல்லியல் ஆய்வு என்ற போர்வையில் தொல்லைகள் தொடர்கிறது.

இந்த விடயங்கள் தொடர்பாக பல கவன ஈர்ப்பு போராட்டங்கள் நடத்தப்பட்டும் இப்போது போராட்டங்களும் நடத்தப்படுவதும் இல்லை. இவ்வாறானபலசம்பவங்கள்கிழக்கில்தீர்வில்லை. இவ்வாறான கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்வது ஒரு புறம் இருந்தாலும் கடந்த காலத்தில் பல குற்றச்செயல்களுக்கு மகிந்த அரசுகாலத்தில் துணைபோனவர் என கருதப்படும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் குற்றப்புலனாய்வு திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்றினால் கடந்த 2025, ஏப்ரல்,08,ல் கைது செய்யப்பட்டார். அவர் கைதாகி இப்போது நான்கு மாதமாகிறது.

மட்டக்களப்பில் தனது கட்சி அலுவலகத்தில் இருந்த வேளையிலேயே கைது இடம்பெற்றது. முதலில் பிள்ளையான் விசாரணைக்காக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 72 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டார்.

பேராசிரியர் இரவீந்திரநாத் ஆரம்பத்தில் வெளியான ஊடகச் செய்திகளின் பிரகாரம் அவர் 2006 டிசம்பர் 15 ஆம் திகதி கொழும்பில் வைத்து காணாமல்போன சம்பவம் தொடர்வாகவே பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். முன்னாள் துணைவேந்தர் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவத்தில் பிள்ளையானுக்கு தொடர்பு இருந்ததாக கூறப்படும் ஈடுபாடு மற்றும் கிழக்கு மாகாணத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற கடத்தல்கள் மற்றும் ஆட்கள் காணாமல் போக்கச் செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக கூடுதல் தகவல்களை பிள்ளையானிட மிருந்து பெறமுடியும் என்று தாங்கள் நம்புவதாகவும் பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் கூறின.



ஆனால் இப்போது 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு வருகின்றார். ஐ.எஸ்.ஐ. அமைப்புடன் தொடர்புடை யது என்று கூறப்பட்ட சஹரான் ஹாசிம் தலை மையிலான முஸ்லிம் இளைஞர்கள் குழு வொன்றினால் ஈஸ்டர் ஞாயிறன்று நான்கு சுற்றுலா ஹோட்டல்களிலும் மட்டக்களப்பு தேவாலயம் உட்பட மூன்று கிறிஸ்தவ தேவால யங்களிலும் தொடர்ச்சியான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.260 க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதுடன் 500 க்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர்.

கார்டினல் மல்கம் ரஞ்சித் தற்போது நடைபெற்றுவரும் விசாரணைகள் தொடர்பிலான முழு விபரங்களும் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்களின் ஆறாவது வருடாந்த நினைவுக்கு முன்னதாக வெளியிடப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கொழும்பு கத்தோலிக்க அதிமேற்றிராணியார் அதிவண. கார்டினல் மல்கம் ரஞ்சித்துக்கு உறுதியளித்திருக்கிறார்.

ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பாக

**பா. அரியநேத்திரன்**

இதுவரை முழுமையான குற்றவாளிகளை கண்டறியப்படாத நிலையில் பிள்ளையானுக்கு அதுதொடர்பாக சந்தேகங்கள் உள்ளதாக்கூறி விசாரணை நடப்பதாக காட்டபடுகிறது.



பிள்ளையானின் கைதுகளுக்குபிள்ளையானின் வாக்குமூலத்தின் அடிப்படையில் சாரதியான ஜெயந்தன் என்பரை கடந்த 2025,ஏப்ரல்,18, ல் சி.ஐ.டி யினர் கைது செய்துள்ளனர். இதேபோல் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் அம்பாறை மாவட்ட பொறுப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இனியபாரதி என்றழைக்கப்படும் கே. புஸ்பகுமார் மற்றும் அவருடைய சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோரை பொலிஸாரால் கடந்த 2025, யூலை,06, ம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

2025, யூலை,27,ல் இனியபாரதியின் சகாவான தொப்பிமனாப் என்றழைக்கப்படும் முன்னாள் திருக்கோவில் பிரதேசசபை உறுப்பினரான சி.விக்கினேஸ்வரனை சிஐடி யினர் கைது செய்துள்ளனர். 2025, யூலை,29,ல், இனிய பாரதியின் இன்னுமொரு சகாவான வெலிகந்தை தீவுச்சேனையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் சபாபதி என்பவரை மட்டக்களப்பு கிரானில் வைத்து சிஐடியினர் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கிழக்கில் பிள்ளையான் உட்பட மொத்தமாக ஐவர் கைதுசெய்யப்பட்ட நிலையில் கிழக்கு மக்களை பொறுத்தவரை குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற மனோநிலையில் உள்ளனர்.

ஆனால் இவ்வாறானவர்களை குற்றச் செயலுக்காக பயன்படுத்திய பெருச்சாளிகள் தென்பகுதியில் முக்கிய அரசியல் புள்ளிகளாக உள்ள நிலையில் அவர்கள் எவருமே இதுவரை கைதாகவில்லை என்பதையே காணலாம்.

2025, யூன் 28 ல் கைது செய்யப்பட்டுள்ள பிள்ளையானை விடுதலை செய்யக் கோரி கையெழுத்து போராட்டம் பிள்ளையானின் ஊரான வாழைச்சேனை, பேத்தாழை பிரதான வீதியில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மற்றைய மனிதப் புதைகுழிகளிலிருந்து செம்மணி ஏன் மாறுபட்டது?

இதுவரைக்கும் வடக்கில் பன்னிரண்டு மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மிக அண்மையில் மன்னார் சதொச கட்டட வளாகத்திலும், கொக்குத்தொடுவாய் கிராமத்திலும் மனிதப் புதைகுழிகள் அபிவிருத்திப் பணிகளின்போது கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விரு மனிதப் புதைகுழிகளின் அகழ்வின் முடிவிலும், சதொச கட்டட மனிதப் புதைகுழிக்கு மதரீதியான அர்த்தப்படுத்தலும், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புபட்ட அர்த்தப்படுத்துதலும் காணப்பட்டது.



இந்த அர்த்தப்படுத்தல்களோடு, மேற்குறித்த இரு மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் தமிழர்கள் மத்தியில் இருந்த எதிர்பார்ப்புகள் பறந்துபோயின. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இறுதிப் போரின்போது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோருபவர்கள், தமிழ் இனவழிப்பிற்கு ஆதாரங்களைத் திரட்டுபவர்கள் ஆகியோரின் எதிர்பார்ப்புக்களும் பயனற்றுப் போயின.



இப்போது அகழப்பட்டுவரும் செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி வேறு மாதிரியானது.

1. மீட்கப்பட்டுவரும் மனித எலும்புக்கூடுகளும் அதிகமானவை சிறுவர்களினுடையவை என சந்தேகிக்கத்தக்கன. எவ்விதமான பகுப்பாய்வுக்கும் உட்படுத்தாமலே, அந்த எலும்புக்கூடுகளைப் பார்த்தவுடனேயே இவை சிறுவர்களுடையவை என்கிற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவன. ஆகவே இவை ஆயுதம் தாங்கியவர்களினுடையவை என்ற முடிவுக்கு யாராலும் வரமுடியவில்லை. குரூரமான குற்றச்செயல் ஒன்றின் பின்னர் அவசர அவசரமாக குழிகள் வெட்டி புதைக்கப்பட்டுள்ளன என்கிற முடிவுக்கே வரமுடிகின்றது. ஒரு சமூகத்தின் அடுத்த தலைமுறையை உற்பத்திசெய்யக்கூடியவர்கள் என வரையறைசெய்யப்படும் சிறுவர்களையே கொன்று புதைத்திருக்கின்றனர். எனவே இவ்விடத்தில் அவ்வினத்தின் அடுத்த தலைமுறை உற்பத்தியானது அழிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு இன உற்பத்தியை தரக்கூடிய தரப்பினரையே கூட்டாக அழிப்பது இனவழிப்புத்தானே. ஆகவேதான் செம்மணியின் சித்துப்பாத்தி தமிழ் இன அழிப்பின் முதற்தர ஆதாரமாகக் கொள்ளத்தக்கது.





2. இங்கு மீட்கப்பட்டுவரும் சிறுவர்களினுடையவை என சந்தேகிக்கப்படும் எலும்புக்கூடுகளோடு இணைந்தவகையில் அகழ்ந்தெடுக்கப்படும் பொருட்கள் சாதாரணர்களின் மனங்களை நெகிழச்செய்பவை. உறக்கத்தைத் துரத்துபவை. புத்தகப்பையை ஒத்த பை, பொம்மை, வளையல், செருப்பு, போச்சிப் போத்தல், குழந்தையை கட்டியணைத்தபடி இருக்கும் பெரிய எலும்புக்கூட்டுத்தொகுதி போன்றன அங்கு இடம்பெற்றிருக்கும் குற்றச்செயலின் குரூரத்தைச் சாட்சிப்படுத்துகின்றன. மனச்சாட்சியுள்ள எத்தகைய மனிதரையும் இந்தப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கான நீதியை கோரச்செய்வன. ஆகவே செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியானது தமிழர்களின் மீது நிகழ்த்தப்பட்ட இனவழிப்புக்கான நீதிக் கோரிக்கையை நியாயப்படுத்தவும், சர்வதேச மயப் படுத்தவும் கூடிய கதவொன்றைத் திறந்திருக்கிறது.



3. சிறுவர்களினுடையவை என சந்தேகிக்கப்படும் எலும்புக்கூடுகளுடன், பெரியவர்களினது என சந்தேகிக்கப்படும் எலும்புக்கூடுகள் மீட்கப்படுவது, குழந்தையை அணைத்தபடி பெரிய எலும்புக்கூட்டுத்தொகுதி மீட்கப்படுவது போன்ற சம்பவங்கள், செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் குடும்பம் குடும்பமாகவும் கொன்று புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றனவல்லவா? வேறொருவரின் குழந்தையைத் தூக்கிக்கொண்டு, யாரும் குரூரமான மரணப் படுக்கையில் கிடப்பதில்லைத்தானே. ஒரு தொகுதி மக்களை குடும்பம் குடும்பமாக அழிப்பதும்கூட இனவழிப்பாகக் கொள்ளத்தக்கதல்லவா?

4. தமிழர்களின் ஏகோபித்த நம்பிக்கையாக இருக்கின்ற சர்வதேச சமூகம், மியன்மாரிலும், சிரியாவிலும், காஸாவிலும்தான் இனவழிப்பு நடந்துகொண்டிருக்கிறது எனத் தம் பார்வையை அந்த நாடுகளின் பக்கம் திருப்பிக்கொண்டிருக்க, செம்மணியில் கொன்று புதைக்கப்பட்ட ஆன்மாக்கள் நிலம்பிளந்து நீதிகோருகின்றன. மேற்குறித்த நாடுகளின் இனவழிப்புக்கெல்லாம் மூத்த இனவழிப்புக்கு சாட்சியாக நாமே இருக்கின்றோம். வந்து பாருங்கள். நீதி தாருங்கள் என நாளாந்தம் நீதிக்குரல் எழுப்பிக்கொண்டிருக்கின்றன. எனவே இந்த அவலத்தை விளங்கிக்கொண்டாவது, நம்மவர்கள் காரியமாற்ற வேண்டும்.

ஜெரா

• • •

அமெரிக்காவும் .. . தொடர்ச்சி ...

மங்களை அகழ்வதில் இணைந்து செயல்படும். இந்த கூட்டணியை வழிநடத்தும் எண்ணெய் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பணியில் நாங்கள் ஈடுபட்டிருக்கின்றோம். யாருக்குத் தெரியும், ஒருவேளை அவர்கள் ஒரு நாள் இந்தியாவுக்கு எண்ணெய் விற்பனை செய்வார்கள்! என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வரலாற்று சிறப்புமிக்க அமெரிக்க-பாகிஸ்தான் வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதில் தலைமைப் பங்காற்றியதற்காக ஜனாதிபதி ட்ரம்பிற்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மைல்கல்லான ஒப்பந்தம் எங்கள் வளர்ந்து வரும் ஒத்துழைப்பை மேம்படுத்தும், இதனால் வரும் நாட்களில் எங்கள் நீடித்த கூட்டாண்மையின் எல்லைகளை விரிவுபடுத்தும் என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார். வர்த்தக ஒப்பந்தம் குறித்த எந்த குறிப்பிட்ட விவரங்களையும் ஷெரீப் வெளியிடவில்லை.

ஏப்ரல் மாதத்தில், உலகெங்கிலும் உள்ள நாடுகள் மீது ‘விடுதலை தின’ வரிகளை டிரம்ப் அறிவித்திருந்தார். அதில் அமெரிக்காவிற்கான பாகிஸ்தான் ஏற்றுமதிக்கு 29% வரி விதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அவை ஜூலை 31 வரை நிறுத்தி வைக்கப்பட்டன.

பாகிஸ்தான் அதிகாரிகள் சமீபத்தில் பேச்சுவார்த்தைக்காக அமெரிக்காவிற்கு விஜயம் செய்திருந்தனர்; வெளியுறவு அமைச்சர் இஷாக் டார் கடந்த வாரம் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோவை சந்தித்தார். சந்திப்புக்குப் பிறகு, அமெரிக்காவும் பாகிஸ்தானும் ஒரு வர்த்தக ஒப்பந்தத்திற்கு “மிக நெருக்கமாக” இருப்பதாக டார் தெரிவித்திருந்தார். அமெரிக்க வர்த்தக பிரதிநிதியின் 2024 தரவுகளின்படி, பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகம் 7.3 பில்லியன் டொலர்களாகும்.

# கறுப்பு யூலை இனவழிப்பு

# மறந்து செல்லும் மலையக மக்கள்



மருதன் ராம்

கருப்பு ஜூலை இனவழிப்பு இடம்பெற்று 42 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இன்று வரை பொறுப்புக்கூறலுக்கான வலியுறுத்தல் தொடர்ந்து வருகிறது. இந்த இன அழிப்பு இலங்கையின் வரலாற்றில் அழியாத ஒரு கறையை விட்டுச் சென்றிருக்கிறது. இந்த இருண்ட அத்தியாயம் இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டூழியங்களை எடுத்துக் காட்டுவதுடன் நீண்ட உள்நாட்டுப் போரில் மிக முக்கியமானஒருபாத்திரத்தையும்வகித்தது. இந்த வன்முறைக்கான விதைகள் நீண்ட காலத்துக்கு முன்னரேயே விதைக்கப்பட்டிருந்தன. 1956, 1958, 1961, 1964, 1974, 1977 மற்றும் 1981 ஆகிய வருடங்களையும் உள்ளடக்கிய விதத்தில் 1983 வரையில் தமிழர்களுக்கெதிரான பகைமையுணர்ச்சி பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்திக் காட்டப்பட்டிருந்தது.



அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் கீழான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வடக்கிலும், கிழக்கிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியையும் ஒடுக்குவதற்கு முயற்சித்தது. இந்தக் கொடூர உத்தியின் விளைவாக சுமார் 200,000 மக்கள் உயிரிழந்தார்கள். வன்முறைச் சம்பவங்களின் விளைவாக பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் இடம்பெயர்ந்ததுடன், அவர்கள் தமது சொந்த நாட்டிலும், வெளிநாடுகளிலும் அகதிகளாக மாறினார்கள். இந்தச் சம்பவங்களின் பின்னர் பெருந்தொகையான குடும்பத் தலைவிகள், பெற்றோரை இழந்தோர் மற்றும் உடல் ரீதியான, உள ரீதியான காயங்களைக் கொண்ட தனிநபர்கள் பெரும் எண்ணிக்கையில் எஞ்சியிருந்தார்கள். சிங்கள ஆளும் வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஏனைய குடிமக்கள் மீது பிரயோகிக்கும் நோக்கத்துடனேயே இவை அனைத்தும் முன்னெடுக்கப்பட்டன. இப்பொழுது 42 வருடங்கள் கழிந்திருக்கும் நிலையிலும் கூட, மாறி மாறி ஆட்சிக்கு வந்த பல்வேறு அரசாங்கங்கள் இந்த வன்முறையைத் தூண்டிய தேசிய பிரச்சினையின் மூல காரணங்களை கவனத்திற்கு கொள்ளத் தவறியுள்ளன.



### மறக்கப்பட்ட மலையக மக்கள்

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற கருப்பு ஜூலை இனவழிப்பு இலங்கை முழுவதும் வாழ்ந்த தமிழ் மக்களின் மனதில் நீங்காது இடம்பிடித்த வடுவாக மாறியுள்ளது. எனினும் இந்த திட்டமிடப்பட்ட இனவழிப்பில் மலையக மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டனர் என்பது தொடர்பில் இன்றுவரை அதிக படியான கவனம் செலுத்தப்படவில்லை. 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் மலையக பிரதேசங்களில் நடந்த இன வன்முறைகளை மலையக மக்களின் தனித்துவமான துயரம் சார்ந்த நீண்ட வரலாற்றின் பின்னணியில் பார்க்க வேண்டும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் தனி சிங்கள சட்டம், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலத்தில் ஏற்பட்ட பஞ்சம், ஸ்ரீமா – சாஸ்த்ரி ஒப்பந்தம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். குறித்த ஒப்பந்தத்தின் ஊடாக இங்கு வாழ்ந்த மலையக மக்களில் பாதியாளவானோர் இந்தியாவுக்கும் மீதமானவர்கள் இலங்கைக்குமென, பிரிக்கப்பட்ட இன ஒடுக்குமுறையும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது. ஸ்ரீமா-சாஸ்த்ரி ஒப்பந்தத்தின் போது பதிவான சம்பவங்களில் திருமணம் முடித்து சில நாட்களின் பின்னர் மனைவி இந்தியாவுக்கும் கணவர் இலங்கைக்கும் என்று பிரித்து அனுப்பப்பட்ட பல சம்பவங்களும் உள்ளன. அது மட்டுமல்லாது 1972ஆம் ஆண்டு பஞ்சம் ஏற்பட்ட காலப்பகுதில் கூட இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்த மக்களுக்கு வாழ்வாதாரம் சொந்த நிலம் என்று காணப்பட்ட போதும் நிலமற்ற தமக்கென்று வாழ்வாதாரமற்ற மலையக மக்கள் மிகவும் ஒரு துன்பகரமான வாழ்க்கையில் தான் வாழ்ந்திருக்கின்றனர்.

1972ஆம் ஆண்டு காலத்தை பற்றி மலையக பிரதேசத்தில் பேசும் போது ‘பஞ்ச காலத்தில் மரவள்ளி கிழங்கை அவித்து உண்டோம், இரண்டு ரொட்டியை பத்து பேர் பிரித்து சாப்பிட்டோம்’ என்றெல்லாம் இன்றும் கூறுவார்கள். ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் காலத்தில் மலையக மக்கள் சனத்தொகையில் அதிகமாக இருப்பதாகவும் அவர்கள் இலங்கை நாட்டிற்கு அச்சுறுத்தலாக வந்துவிடுவார்கள் என்ற ஒரு கருத்துவாதமும் பரப்பப்பட்டது. இந்தநிலையில் 1983ஆம் ஆண்டு கலவரம் கொழும்பில் இருந்த தமிழ் மக்களை எவ்வாறு பாதித்ததோ அதேபோன்று இரத்தினபுரி, கேகாலை, பதுளை, மாத்தளை மற்றும் நுவரெலியா போன்ற மாவட்டங்களில் சிங்கள மக்களின் மத்தியில் வாழ்ந்த மலையக தமிழ் மக்களையும் பாதித்தது. இந்த கலவரத்தின் போது நுவரெலிய நகரமும் எரியூட்டப்பட்டது.

இதற்கு பிரதான காரணமாக அன்றைய அமைச்சர் காமினி திசாநாயக்க இருந்தார். ‘நுவரெலியா நகரம் பிரித்தானியர்களினால் கட்டமைக்கப்பட்டது, இதில் சில பழமையான விடயங்கள் காணப்பட்டதால் அவற்றை அழித்து புதிதாக நகரை உருவாக்குவதற்கே எரித்தோம்’ என்றும் அவர் கூறியிருந்தார். 1983 ஜூலை இனவழிப்பின் போது பதுளை -

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# மேற்குலகத்தை அதிரவைக்கும் சீன ஈரான் இரகசிய இராணுவ உடன்பாடு

வேல்ஸில் இருந்து அருஸ்

**பகுதி 1**

இன்று, சர்வதேச இராணுவ விவகாரங்களில் ஒரு மிகப்பெரும் அதிர்வு தரும் வளர்ச்சி வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது மத்திய கிழக்கில் அதிகார சமநிலையை மாற்றக் கூடியதாகவும், உலகளாவிய பாதுகாப்பு உத்திகளில் அலை அலையாக மாறக்கூடியதாகவும் இருக்கலாம். சீனாவும் ஈரானும் ட்ரோன் போர், ஏவுகணை உற்பத்தி மற்றும் கடற்படை விரிவாக்கங்களை உள்ளடக்கிய ஒரு இரகசிய இராணுவ ஒப்பந்தத்தை முடித்துள்ளதாக கூறப்படுகிறது.

இது ஒரு விரைவான ஒப்பந்தம் மட்டுமல்ல. இது இரண்டு சக்திகளையும் பொதுவான நலன்கள் மற்றும் பரஸ்பர எதிரிகளுடன் இணைக்கும் ஒரு நீண்டகால மூலோபாய சீரமைப்பு ஆகும். ஹோர்மாஸின் நேர்கோட்டுக்கு அருகில் ரகசிய ட்ரோன் தளங்களை ஈரான் உருவாக்கி வருவதால், சீன துறைமுகங்களிலிருந்து பாலிஸ்டிக் ஏவுகணிக்கான எரிபொருள் ஏற்றுமதிகள் அமைதியாக அங்கு வந்து சேருகின்றன, மேலும் சீன தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கும் ஈரானிய கடற்படை பிரிவுகள் உருவாகி வருகின்றன. இந்த கூட்டணி உலகளாவிய ரீதியில் ஒரு புதிய அதிகார அச்சை உருவாக்குகிறது.



செயற்கைக்கோள் படங்கள், இடைமறிக்கப்பட்ட தகவல் தொடர்புகள் மற்றும் கசிந்த உளவுத்துறை ஆவணங்களிலிருந்து பெறப்பட்ட இந்த தகவல்கள் இப்போது உலகம் முழுவதும் உள்ள பாதுகாப்பு நிபுணர்களால் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இதன் தாக்கங்கள் ஆழமானவை, மேலும் அவை இராணுவ ஆய்வாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் உலகளாவிய பார்வை யாளர்களிடமிருந்து உடனடி கவனத்தை பெறுகின்றன. இந்த ஒப்பந்தங்கள் புவிசார் அரசியல் நெருக்கடிகள் உச்சத்தில் இருக்கும் நேரத்தில் வருகிறன.

ஈரானின் வணிகக் கப்பல் பாதைகள் மீதான தொடர்ச்சியான நெருக்கடிகளுக்கு பதிலளிக்கும் விதமாக, பாரசீக வளைகுடாவில் அமெரிக்கா தனது கடற்படை நடைவடிக்கைகளை அதிகரித்துள்ளது. இதற்கிடையில், மேற்கத்திய நாடுகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் செல்வாக்கை கட்டியெழுப்பும் தனது முயற்சிகளை சீனா தீவிரப் படுத்தியுள்ளது.




இந்த ஒப்பந்தம் பல மாதங்கள் கடந்ததாக இல்லாவிட்டாலும், அமைதியான ராஜதந்திரம், கூட்டு இராணுவப் பயிற்சிகள் மற்றும் இரகசிய ஆயுத ஒப்பந்தங்களின் உச்சக்கட்டமாகத் உருவாகியுள்ளது. இந்த புதிய கூட்டணியின் மூலக்கல் ஈரானின் தெற்கு கடற்கரையில் கட்டப்பட்டு வரும் ட்ரோன் தளங்களின் வலையமைப்பாகும்.

ஹோர்மாஸின் நேரான பாதை வழியாக மேற்கொள்ளப்படும் போக்குவரத்தை கண்காணிக்கவும், சீர்குலைக்கவும் மூலோபாய ரீதியாக இந்த தளம் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிறுவல்கள் பொதுமக்களுக்கான வசதிகள் போல தோற்றமளிக்கும் வகையில் உருமறைப்பு செய்யப்பட்டுள்ளன, ஆனால் அவை பெரிதாக வலுவூட்டப்பட்டுள்ளன, இதில் ரேடார், அலை வரிசைகளை குழப்பும் சாதனங்கள் மற்றும் விமான எதிர்ப்பு பேட்டரிகள், ட்ரோன் ஹேங்கர்கள், வாகன அசெம்பிளி லைன்கள் மற்றும் கட்டளை மையங்கள் உள்ளன. ஆரம்பத்தில் அவை கப்பல் கொள்கலன் யார்டுகள் மற்றும் கைவிடப்பட்ட தொழில்துறை மையங்கள் போல தோற்றமளிக்குமாறு மறைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அகச்சிவப்பு இமேஜிங் *(Infrared imaging)* மற்றும் மின்காந்த கையொப்ப கண்காணிப்பு *(Electromagnetic signature tracking)* ஆகியவை இந்த தளங்கள் முழுமையாக செயல்படும் இராணுவ தளங்கள் என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.



இந்த தளங்களில் காணப்படும் ஆயுதங்கள் சீனாவிலிருந்து வந்த பொருட்களாகும் குறிப்பாக, மென்பொருள் நிரல்முறைகள், ட்ரோன் ஏர்ஃப்ரேம்கள் மற்றும் *AI* ஒருங்கிணைப்பு தளங்கள் அனைத்தும் மக்கள் விடுதலை இராணுவத்தின் ஏற்றுமதிப் பிரிவின் விநியோகங்கள் என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. இந்த தளங்களின் கட்டமைப்பு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. செயல் திறன் மற்றும் விரைவான பயன்பாட்டிற்காக ஒவ்வொரு அங்குலமும் அதிகபட்சமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. சீன மற்றும் ஈரானிய தொழில்நுட்ப வல்லுநர்கள் கன்சோல் நிலையங்களில் *(Console stations)* அருகருகே பணியாற்றுகிறார்கள், வானூர்தி தொழில்நுட்ப முறைகளை ஒருங்கிணைத்து, சுயாதீனமான செயல்பாடு மற்றும் திரள் தந்திரோபாய திறன் *(Loading mission parameters)* கொண்ட ட்ரோன்களை வடிவமைத்து வருகின்றனர்.



உள்ளக முகாம்களிலிருந்து கசிந்த பயிற்சி காட்சிகள், ஈரானிய பணியாளர்கள் மாண்டரின் மொழியில் (சீன மொழி) அறிவுறுத்தல்களைப் பெறுவதைக் காட்டுகிறது, இது சீன மென்பொருள் உருவாக்குநர்களால் வழங்கப்பட்ட *AI* அமைப்புகளால் ஒரே நேரத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

ஆளில்லா தாக்குதல் விமானங்களின் வரிசைகள் சில நிமிடங்களில் பயன்படுத்த தயாராக இருக்கும் கன்வேயர் ரேக்குகளில் வைக்கப்பட்டுள்ளன. காற்று வடிகட்டுதல் அமைப்புகள் *(Air filtration systems)* வலுவானவையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இது இரசாயன அல்லது உயிரியல் அச்சுறுத்தல்களுக்குத் அவர்கள் தயாராக இருப்பதைக் காட்டுகின்றன. இரட்டை வழிகளில் அதாவது சூரிய மற்றும் புதைக்கப்பட்ட அணு நுண் உலைகள் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது, வெளிப்புற நாசவேலை அல்லது *EMP (Electromagnetic pulse)* தாக்குதல்கள் ஏற்பட்டாலும் தடையின்றி செயல்படுவதை அது உறுதி செய்கிறது. கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறைகள் ஆழமான நிலத்தடியில் உள்ளன, வான்வழி கண்டறிதல் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து அவை பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்



பகுதி 2–இறுதிப்பகுதி

# 40 வருடங்களாகப் போராடிய ஒரு குழு, இன்று தனது ஆயுதங்களைக் கையளிக்கிறது

தமிழில்: ஜெயந்திரன்

**எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தி வேறு எங்கோ இருக்கிறது**

மத்திய கிழக்கைப் பொறுத்தவரையில், அதன் அரசியல் மற்றும் பல்வேறு இனக்குழுமங்களைப் பார்க்கும் பொழுது, குர்தீஷ் மக்கள், அதன் வரலாற்றில் மிக முக்கியமான பங்கை வகித்துவந்திருக்கிறார்கள். சுயாட்சிக்கும், சுதந்திரத்துக்குமான அவர்களது தேடலும், ஆயுதப் போராட்டங்களில் அவர்கள் காட்டிய ஈடுபாடும், வெளிச்சக்திகளின் கவனத்தை குறிப்பாக மேற்குலகத்தின் கவனத்தை அவர்கள் பால் ஈர்த்திருந்தது.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும், பிகேகே (PKK) அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவித்திருந்த பொழுதிலும், ஐஎஸ் (ISIS) பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் பொழுது, ஈராக்கிலும் சிரியாவிலும் குர்தீஷ் படைகள் மேற்குலகத்தின் பிராந்திய மூலோபாயத்தில் அவர்களது முக்கிய கூட்டாளிகளாக இருந்திருக்கிறார்கள்.

அங்கரா, பஹ்தாத், டமஸ்கஸ் மற்றும் தெஹ்றான் போன்ற அரசுகளுக்கு எதிரான துருப்புச் சீட்டாகக் குர்தீஷ் பிரச்சினையை மேற்குலகம் பயன்படுத்திவந்திருக்கிறது. இஸ்லாமியக் குடியரசான ஈரானை நிலைகுலையச் செய்ய, ஈரானிய குர்தீஷ் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக வளர்ந்து வரும் பிரிவினை உணர்வுகளை இஸ்ரேலின் துணையோடு மேற்குலகம் பயன்படுத்தி வந்திருக்கிறது.

ஆனால், மேற்குலகின் கொள்கைகளோ, தமக்கிடையே பல முரண்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. துருக்கியின் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கு, அமெரிக்காவின் சனநாயகக் கட்சியினர் குர்தீஷ் போராட்ட இயக்கங்களுக்கு தங்கள் ஆதரவை அளித்து வந்திருக்கின்றனர். குடியரசுக் கட்சியினர் அதற்கு மாறாகத் துருக்கிக்கு தமது நட்புக்கரங்களை நீட்டி, நடைமுறைச் சாத்தியமான ஒரு அணுகுமுறையைப் பேணி வருகின்றனர்.



இக்காரணங்களினால் தான், கடுமையான கொள்கைகளைக் கொண்ட குர்தீஷ் போராட்ட குழுக்களுக்கு அமெரிக்கா தனது ஆதரவைக் குறைத்து, துருக்கியுடன் மூலோபாய ரீதியிலான உறவை ஆழப்படுத்தியதைத் தொடர்ந்து, 2025 இல் துருக்கி குர்தீஷ் குழுக்களுடன் தனது இராஜீக முயற்சிகளை முன்னெடுக்கத் தொடங்கியது.



தற்போது முன்னெடுக்கப்படும் அமைதி முயற்சிகளில், முக்கிய ஆளுமையாகப் பார்க்கப்படுபவர், துருக்கியின் வெளிவிவகார அமைச்சரான ஹக்கான் விடான் (Hakan Fidan) ஆவார். மேனாள் புலனாய்வு அதிகாரியான இவர், பேச்சுவார்த்தைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர் மட்டுமன்றி, குர்தீஷ் இனத்தைச் சார்ந்தவர் என்பதும் மிக முக்கியமான விடயமாகும். ஹக்கான் விடானின் நியமனம், அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு துருக்கி ஆயத்தமாகி விட்டது என்பதைக் கட்டியம் கூறியது. துருக்கி தற்போது முன்னெடுத்துள்ள இந்த அமைதி முயற்சிக்கு துருக்கி அதிபர் எர்டோகானின் தேசியக் கூட்டணியின் கூட்டாளியான டெவ்ளெற் பாச்சேலியின் (Devlet Baceli) ஆதரவும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. வரலாற்று ரீதியாக மிகக் கடும்போக்கான கொள்கைகளைக் கொண்டிருந்த தீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய இயக்கக் கட்சிக்கு இது மிகப் பெரிய மாற்றம் ஆகும்.

**தேர்தலை இலக்காகக் கொண்டுள்ள அமைதி முயற்சிகள்**

துருக்கியின் உள்ளகப் பின்புலத்தைப் புரிந்து கொள்ளாமல், அங்கு தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அமைதி முன்னெடுப்புகளைப் புரிந்துகொள்ள முடியாது. பொருண்மிய ரீதியாகத் துருக்கி பல குழப்பங்களைச் சந்தித்து வருகிறது. பணவீக்கம் மிகவும் உயர்வாக இருக்கிறது. வேலையில்லாப் பிரச்சினை ஆழமாக இருக்கிறது. அரசு மீதான மக்களின் அதிருப்தி உணர்வு அதிகரித்துவருகிறது. தேர்தலை முன்கூட்டியே வைக்குமாறும், முக்கிய பிரமுகர்களான இஸ்தான்புல் நகரபிதா, எக்றெம் இமாமோளு போன்றவர்களை விடுவிக்குமாறும் எதிர்க்கட்சிகள் அழுத்தம் பிரயோகித்துவருகின்றன. இவ்வாறான ஒரு பின்புலத்தில், மூலோபாய ரீதியிலான தலைமைத்துவத்தையும், விட்டுக்கொடுக்கும் தன்மையையும் வெளிப்படுத்த அதிபர் எர்டோகான் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான ஒரு சூழலில் தான், ஆளும் நீதி மற்றும் அபிவிருத்திக்கான கட்சி அரசியல (AKP) யாப்பைத் திருத்தும் முயற்சிகளைத் தொடங்கியிருக்கிறது. உத்தியோகபூர்வ ரீதியாகப் பார்க்கும் பொழுது அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கும் அரசியல் யாப்புத் திருத்தங்களுக்குமிடையே எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. ஆனால் பகிரங்க உரையாடலைப் பொறுத்தவரையில் இரண்டுக்குமிடையேயான தொடர்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. குர்தீஷ் மக்களுக்குச் சார்பான, மக்கள் சனநாயகக் கட்சியுடன், ஏகேபியால் ஒரு ஒப்பந்தத்தை ஒப்பமிட முடிந்தால், அரசியல் யாப்புத் திருத்தங்களை அமுல்நடத்துவதற்கு நாடாளுமன்றத்தில் போதிய ஆதரவை அந்தக் கட்சி பெற முடியும். இந்த மாற்றங்கள் 2028க்குப் பின்னர் மீண்டும் ஒரு தடவை தேர்தலில் போட்டியிட, எர்டோகானுக்கு வாய்ப்பைக் கொடுக்கும்.



இருப்பினும் தற்போது முன்னெடுக்கப்படும் அமைதி முயற்சிகள் எந்த நேரமும் முறிவடையலாம். சிறைவாசத்தை அனுபவிக்கின்ற பிகேகேயின் தலைவரான அப்துல்லா ஓகாலான் (Abdullah Ocalan) சம்மதத்துடன் ஆயுதத்தைக் கீழே வைக்க பிகேகே எடுத்த முடிவைப் பார்க்கும் போது, துருக்கியில் வாழும் 20-25 மில்லியன்கள் எண்ணிக்கையிலான குர்தீஷ் மக்கள் எல்லோரும், இந்த அமைதி முயற்சிகளை ஆதரிக்கிறார்கள் எனக் கருத முடியாது. ஓகாலான் ஒரு சிலரால் மதிக்கப்படலாம். ஆனால் துருக்கியில் வாழும் எல்லா குர்தீஷ் மக்களும் அவரை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது.

குர்தீஷ் சமூகம் தற்போது மிகவும் பிளவுபட்டிருக்கிறது. துருக்கிய சமூக வாழ்வினுள் முற்றுமுழுதாகக் கலந்து துருக்கிய சிவில் வாழ்க்கையில் முழுமையாக ஈடுபட வேண்டும் ஒரு சில மக்கள் ஆசிக்கிறார்கள். ஏனையவர்களோ, பண்பாட்டு ரீதியாக தமது தனித்துவம் பேணப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். துருக்கியின் தென் மாகாணங்களிலும் ஈராக் சிரியா ஆகிய நாடுகளின் எல்லைகளிலும் துருக்கிப் படைகள் முன்னெடுத்து வருகின்ற இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக இன்னொரு மூன்றாவது

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## மேற்குலகத்தை . .. தொடர்ச்சி ...



வெளிநாட்டு செயற்கைக்கோள்கள் அல்லது ட்ரோன்கள் மூலம் மின்னணு உளவு பார்ப்பதைத் தடுக்க சுவர்களில் சிக்னல் உறிஞ்சும் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. முழு உட்புற அமைப்பும் வெறும் பாதுகாப்பை அல்லாது, ஒரு போர்க்கள நிலையைக் குறிக்கிறது. இவை தாக்குதல்களைத் தொடங்குவதற்கும், உளவுத்தகவல்களை சேகரிப்பதற்கும், தேவையான முக்கியமான பகுதியில் வான் மேலாதிக்கத்தை பராமரிக்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட தளங்கள். ஒருங்கிணைந்த ஆயுத தொழில்நுட்பத்தின் செயற்றிறன் என்பது அச்சுறுத்தல் நிலை உண்மையிலேயே அதிகரிக்கும் இடத்தைக் குறிக்கின்றது.

ஈரானிய ட்ரோன்கள் வரலாற்று ரீதியாக மிகவும் தரமான ஆயுதங்கள், ஒழுங்கற்ற மென்பொருள் மற்றும் வரையறுக்கப்பட்ட எரிபொருள் திறன் ஆகியவற்றால் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால் தென்சீனக்கடலில் பயன்படுத்த முதலில் உருவாக்கப்பட்ட J10C போர் விமானத்தின் சென்சர்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும் இலக்கு தாக்குதல் உத்திகளை தழுவி எடுக்கப்பட்ட வெப்ப உணர்திறன் உள்ளிட்ட சீன மேம்படுத்தல்களுடன், இந்த ட்ரோன்கள் இப்போது பல மேற்கத்திய ட்ரோன்களுக்கு இணையாக உள்ளன.

சமீபத்திய பயிற்சிகளில், பயன்படுத்தப்பட்ட வானூர்தியில் இருந்து இயக்கப்படும் 50 ட்ரோன்கள், ரடார்களை ஊடறுத்துச் செல்லும் விதமாக அச்சுறுத்தல் தரும் வகையில் உள்ளன. ஒரே சமயத்தில் உயரம் மற்றும் தாக்குதல் திசைகளை அவை மாற்றுகின்றன. சிறிய, இலகுவான மற்றும் திறமையான சீனாவால் வடிவமைக்கப்பட்ட எரிபொருள் செல்கள் காரணமாக இந்த தளங்களின் செயற்றிறன் 200%க்கும் அதிகமாக விரிவடைந்துள்ளது. ஏவுகணை அமைப்புகளும் ஒரு மிகப்பெரும் விரிவாக்கத்தை கண்டுள்ளன.

திட எரிபொருள் பாலிஸ்டிக் ஏவுகணைகளில் ஒரு முக்கிய மூலப்பொருளான அமோனியம் பெர்க்ளோரேட்டை சீனா டன் கணக்கில் அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது. இதன் மூலம், ஈரான் தெற்கு ஐரோப்பா வரை இலக்குகளை தாக்கக்கூடிய நீண்ட தூர ஏவுகணைகளை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது, இது பிராந்திய அமெரிக்க தளங்கள் மற்றும் நட்பு கடற்படை பிரிவுகளை சீர்குலைக்கும் நோக்கில் குறுகிய தூர தூரவீச்சுக்களையும் கொண்டுள்ளது. Ashd கேவியர் பாலைவனத்தில் நடத்தப்பட்ட சோதனைகள் கிளஸ்டர் வெடிமருந்துகள் மற்றும் குறைந்த மகசூல் கொண்ட தெர்மாபரிக் பேலோடுகள் உள்ளிட்ட புதிய போர்முனை வடிவமைப்புகளை வெளிப்படுத்தியுள்ளன.

இந்த ஏவுகணைகளின் வழிகாட்டுதல் அமைப்புகள் இப்போது ஈரானின் முன்னர் காலாவதியான GPS சார்புகளை மாற்றும் சீனாவின் BU செயற்கைக்கோள் நெட்வொர்க்குடன் இணைக்கப்பட்டுள்ளன. இது தாக்குதலின் துல்லியத்தை கணிசமாக மேம்படுத்துவதுடன், ஏவுகணையின் பயணப் பாதையிலும் நடுவில் மாற்றங்களை ஏற்படுத்த அனுமதிக்கின்றது. இதனால் அதனை இடைமறிப்பது மிகவும் கடினமாகின்றன.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடற்படை நவீனமயப்படுத்தல்களும் விரிவடைந்துள்ளன. சிறிய வேகப் படகுகளை உள்ளடக்கிய ஈரானின் பிரபலமற்ற திரள் தந்திரோபாயங்கள் இப்போது சீன இலக்கு ரேடார்கள் மற்றும் மின்னணு போர் தொகுப்புகளால் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த மேம்படுத்தல்கள் தொலைதூர ஒருங்கிணைப்பு மற்றும் இரகசியமான தகவல் தொடர்பை மேற்கொள்ள உதவுகின்றன, மேலும் நெரிசல் அல்லது இடைமறிப்பையும் அவை தடுக்கின்றன. ஈரானின் பல புதிய கப்பல்கள் சீன கப்பல் கட்டும் தளங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் stealth holes பொருத்தப்பட்டுள்ளன, இதனால் அவை சோனார் மற்றும் ரேடாருக்கு குறைவாகவே தெரியும். ட்ரோன் விமானம் தாங்கிகள், செங்குத்து ஏவுதளட்ரோன்கள் மற்றும் நீர்மூழ்கிக்கப்பல்களை எடுத்துச் செல்லும் வகையில் மறுசீரமைக்கப்பட்ட பெரிய படகுகள் என்பன மிகவும் ஆபத்தானவை.

**தொடரும்....**

தகவல் உதவி : *IronWing Command*






## பாலஸ்தீனத்தை . .. தொடர்ச்சி ...

மடைந்துவரும் நிலைமை ஒக்டோபர் ஏழாம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதல் ஆகியவற்றை கருத்தில் கொண்டே இந்த முடிவை எடுத்துள்ளதாக கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, செப்டெம்பரில் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்திற்கு முன்பு பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதற்கான பிரித்தானிய பிரதமரின் முடிவை வரவேற்பதாக பிரித்தானிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன் தெரிவித்துள்ளார்.

இது ஒரு முக்கியமான படியாகும். ஆனால் கொடூரமான மற்றும் சகிக்க முடியாத வன்முறை சுழற்சியை முடிவுக்குக் கொண்டுவருவதில் இருந்து நாம் இன்னும் வெகு தொலைவில் இருக்கிறோம்.

பாலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய மக்கள் இருவருக்கும் ஒரு நியாயமான மற்றும் நீடித்த அமைதி அடைவதற்கு மேலும் விரைவான நடவடிக்கைக்கு அழுத்தம் கொடுக்க என்னால் முடிந்த அனைத்தையும் தொடர்ந்து செய்வேன்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாலஸ்தீனத்தை பிரான்ஸ், ஸ்பெயின், அயர்லாந்து, நோர்வே, பிரித்தானியா மற்றும் கனடா ஆகிய நாடுகள் ஆதரிப்பதற்கு தீர்மானித்துள்ளன. எனினும் கனடாவின் முடிவு கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வரி தொடர்பான உடன்பாட்டை பாதிக்கும் என அமெரிக்க அதிபர் கடந்த வியாழக்கிழமை (31) மிரட்டல் விடுத்துள்ளார்.

• • •

**விவசாய நில . . . தொடர்ச்சி . . .**

இறக்கமாட்டோம். ஆர்ப்பாட்டம் செய்ய நாட்டில் இடமளியோம். இது மக்களுக்கான அரசாங்கம் என கூறி வேறு வெளிநாட்டு கம்பனிகளினதும் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கோரிக் கைகளுக்குள் மாட்டி தத்தளித்து மக்களை துன் புறுத்துகின்றனர். இதனை விடுத்து அரசாங்கம் கருணை செய்து மக்களது காணிகளை வழங்க அரசாங்கமும் ஜனாதிபதியும் இவ் விடயத்தில் செயற்பட வேண்டும் என்பதே கோரிக்கையாக காணப்படுகிறது" என்றார்.

குறித்த பகுதி விவசாயிகள் தங்களுக்கு நீதி நியாயம் ஊடாக தங்கள் காணிகள் தங்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்களான பிரதியமைச்சர் அருண் ஹேமச் சந்திர, ரொசான் அக்மீமன இருவரும் அப் பகுதி மக்களுடன் காணிகளை தனியார் கம்பனிகளுக்கு வழங்க முன் கலந்துரையாடி விட்டு எந்த கம்பனிகளுக்கும் வழங்கமாட்டோம் என வாக்குறுதி அளித்து விட்டு இலங்கை துறை முக அதிகார சபையினரின் மேற்பார்வையில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பலத்த பாதுகாப்புடன் காணிகளை அளவீடு செய்து தற்போது இரு கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக வழங்கியுள்ளனர்.

தற்போது அங்கு வேலைத் திட்டமும் இடம் பெற்று வருகின்றது. ஆட்சி அதிகாரத்தை பெற முன்னர் பல வாக்குறுதிகளை வழங்கி ஏழை விவசாயிகளை தற்போது ஏமாற்றியுள்ளனர்.

கடந்த காலங்களில் உள்ள அரசாங்கம் இதனை தனியாருக்கு ஒப்பந்தம் செய்து நீண்ட கால குத்தகைக்கு வழங்கியுள்ளனர். நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் உள்ள காணிகளை தவிர ஏனைய காணிகளை வழங்க முயற்சிப்பதாகவும் மாவட்ட செயலகம் முன் இடம் பெற்ற தாக்குதலுக்கு தங்கள் கண்டனத்தை தெரிவிப்பதாகவும் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன தெரிவித்துள்ளார்.

இது போன்று பிரதியமைச்சர் அருண் ஹேமச் சந்திர தெரிவித்திருப்பதாவது, மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பங்கு கொள்ளாமல் அரசியல் பின்னணியைக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் மக்களை வழிநடத்தியுள்ளார். குறித்த பாராளுமன்ற உறுப்பினர் 2015 ம் ஆண்டு தொடக்கம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிலும் தொடர்புள்ளவராக இருந்தவர் எனவும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட அப்பாவி ஏழை விவசாயிகள் தாக்கப்பட்டமை தொடர்பில் முத்து நகர் ஒன்றிணைந்த விவசாய சம்மேளனத்தின் தலைவி திருமதி சஹீலா சபருள்ளா தெரிவிக்கையில் "கடந்த 53 வருடங்களாக 800 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை விவசாயத்தை மேற்கொண்டு வருகிறோம். 2023ல் குளம் புனரமைப்புக்காக ஒரு கோடி ரூபாவுக்கு மேல் ஒதுக்கப்பட்டு இலங்கை துறைமுக அதிகார சபை என உரிமை கோரினர். இதனால் அபிவிருத்தி நிறுத்தப்பட்டது. இங்கு ஏக்கர் வரி செலுத்தி வந்தோம். பசளை பெற்று விவசாயம் செய்தே வந்தோம். ஜூலை கலவரத்தின் போது இராணுவம் ஆக்கிரமித்தது. பின்னர் மக்கள் மீள குடியேற்றப்பட்டனர்.

1984ல் வர்த்தமானி அறிவித்தலை அப் போதைய துறை முக அமைச்சராக இருந்த லலித் அதுலத் முதலி மூலமாக துறை முக அதிகார சபை காணி என அறிவிக்கப்பட்டது. மஹிந்த ஆட்சி காலத்தில் பல விவசாய உதவித் திட்டங்களை மேற்கொண்டு உதவினார். ஆனால் அண்மைக் காலமாக துறை முக அதிகார சபையினர் வெளியேறுமாறு கூறி தற்போது அடாத்தாக கையகப்படுத்தி தனியார் கம்பனிகளுக்கு தாரைவார்த்துள்ளனர்.

இதனை மீள பெறவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை நம்பினோம். தற்போது ஏமாற்றியுள்ளனர். அப்பாவி விவசாயிகளின் வயிற்றில் அடித்துள்ளனர், எனவும் தேசிய மக்கள் சக்தி ஆளுங் கட்சி உறுப்பினர்கள் எங்களுக்கு உதவுவதாக வாக்குறுதி அளித்தனர்.

ஆரம்பத்தில் இவ்வாறு கூறி இவர்கள் முத்து நகர் கிராமத்துக்குள் வருகை தந்து சென்றனர். தற்போது வளங்களை சூறையாடி மணலைக் கூட இயந்திரம் மூலமாக ஏற்றுமதி செய்கின்றனர்.

விவசாய நிலம் தொடர்பில் பேசிய எங்கள் நால்வரை சீனக் குடா காவல்துறை விசாரணை என கூறி சிறையில் அடைத்தனர். இதை கேட்கவே மாவட்ட செயலகம் முன் ஒன்று கூடிய தருணம் குறித்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது உரிய பிரதியமைச்சரை சந்திக்க விடாது, பெண்கள் உட்பட ஏழை விவசாயிகளை தாக்கினர். காவல் உயரதிகாரி பெண் ஒருவரை இழுத்து வீசி தாக்கினார். இவ்வாறான தாக்குதல்களை ஏற்க முடியாது வன்மையாக கண்டிக்கத்தக்கது. எங்கள் வளங்களை வெளியார் சூறையாடுவதை ஏற்க முடியாது எனவும் தெரிவித்தார்.

குறித்த விவசாயிகளின் காணி மீட்பு போராட்டங்களுக்காக பல முயற்சிகளை மேற்கொண்டு வந்த நிலையில் எதிர்கட்சி தலைவருமான பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜீத் பிரேமதாசவை முத்து நகர் விவசாயிகள் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடிய நிலையில் குறித்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியுள்ளார்.

• • •




**கருப்பு யூலை . . . தொடர்ச்சி . . .**

லுணுகலை பகுதியில் இரண்டு பாடசாலைகள் எரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சுதந்திரத்தின் பின் மலையக பகுதிகளில் அந்த மக்களின் இருப்பையும் கல்வியையும் அரசாங்கத்தால் கட்டவிழ்க்கப்பட்ட இனக்கல வரங்களில் 1983ஆம் ஆண்டு இனக் கலவரம் வரலாற்றில் அழிக்க முடியாத இருண்ட சம்பவமாக இருந்து வருகிறது.

**கரும் புள்ளியின் தாக்கம்**

ஜூலை இனவழிப்புக்கு பின்னர் மலையக மக்கள் சார்ந்த பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த இனவழிப்புக்கு பின்னர் தங்களின் இருப்பு தொடர்பான கேள்வி மலையக மக்களின் மத்தியில் எழுந்தது. இதனடிப்படையில் அரசியல் உரிமை சார்ந்த கேள்வி வலுவடைந்தது.. கருப்பு ஜூலையை கண்டித்து 1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி மலையகத்தின் பிரதான அரசியல் கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. 'சிறுபான்மை தமிழ் மக்கள் மீது ஏவி விடப்பட்ட இந்த வன்முறை நன்கு திட்டமிடப்பட்ட இன அழிப்புச் செயலாகும். குண்டர்களும் காடையர்களும் எந்தவிதமான கட்டுப்பாடும், தங்கு தடையும் இன்றி சுதந்திரமாக வீதிகளில் அலைந்து திரிந்து திட்டமிட்ட இலக்குகளை தெரிந்தெடுத்து தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தி வன்முறைகளில் ஈடுபட்டு பேரழிவு மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

பல சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு படைகள் அவர்களை உற்சாகப்படுத்தியும் மேலும் அழிவுகளை ஏற்படுத்த ஒத்தாசையும் புரிந்தனர். அவ்விதம் அவர்களை செய்ய அனுமதித்து விட்டு அரசு இயந்திரமும் பாதுகாப்புப் படைகளும் வெறுமனே கை கட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. எந்தவித பாதுகாப்புமற்ற அப்பாவி மக்கள் மீது படுகொலை, கற்பழிப்பு, கொள்ளை, தீ வைப்பு என்பன தங்கு தடையின்றி மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கத்தின் மீது இந்த மக்களுக்கு எந்தவித நம்பிக்கையும் இல்லாமல் போய்விட்டது.' என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான பல திட்ட மிடப்பட்ட இனவழிப்புகளை எதிர்நோக்கிய மலையக சமூகத்தினர் மத்தியில் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான விழிப்பு தற்போது குறைவடைந்து செல்கிறது. உதாரணமாக ஜூலை கலவரம் குறித்து அறிந்திராத இளைஞர்களும் சிறுவர்களும் தற்போது மலையத்தில் உள்ளனர். தங்களுக்கு எதிராக கட்டவிழ்க்கப்பட்ட இனவழிப்பை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துரைக்க வேண்டியது மலையக மக்களின் பொறுப்பாகும். இது மீள நிகழாமையை உறுதி செய்வதற்கு வழிவகுக்கும்.

• • •

**அறுகம் விரிகுடா . . . தொடர்ச்சி . . .**

"அங்கே ஹீப்ரு மாதிரி தோற்றமளிக்கும் உணவுப் பொருள் பட்டியல் இருக்கின்றது. அதில் அதிகமாக ஹீப்ரு இருக்கிறது.

சிங்களத்தையோ, தமிழையோபார்ப்பதை விட இங்கு நிறைய ஹீப்ரு மொழி பயன்படுத் தப்பட்டுள்ளது.. நாம் இலங்கையில்தான் இருக்கி றோமா?" என்று கேள்வி எழுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அறுகம் விரிகுடாவில் இஸ்ரேலியர்கள் உள்ளூர்வாசிகளைத் தடைசெய்து நிகழ்வுகளை நடத்தியதாகவும் கூறப்படுகிறது என்றும் டாம் மோனகிஸ் குறிப்பிட்டுள்ளார்.

## தீவுச்சேனை ... தொடர்ச்சி ...

வசதிகளைபிள்ளையானுக்குசெய்து கொடுத்தார். 2007, நவம்பர் தொடக்கம் பிள்ளையான் நேரடி கண்காணிப்பு இரகசிய முகாமாக செயற்பட்டது.

லண்டன் சென்ற வேளையில் கருணா ஸ்கொட்லன்ட் யாட் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு போலிக் கடவுச்சீட்டு மோசடிக்காக 09 மாதங்கள் சிறை வைக்கப்பட்டு 2008 யூலை 03 ல் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். அந்தபோலிக்கடவுச்சீட்டு இராஜதந்திர கடவுச்சீட்டு (Diplomatic Passport) அந்த பாஸ்போர்ட் இலக்கம் D1944260.

2007ஆம் ஆண்டு லண்டன் சென்ற கருணா தனது பெயரை கோகில குணவர்த்தன என மாற்றி கள்ள கடவுச்சீட்டை அப்போதைய ஜனாதிபதி ராஜபக்சவின் உத்தரவின் பெயரில் செய்து வழங்கியதாகவும் அந்த கடவுச்சீட்டில் கோகில குணவர்த்தன என்கிற கருணாவின் போலியாளின் தொழில் "வனஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர்" என்று குறிப்பிட்ட விடயம்தான் இங்கிலாந்து அதிகாரிகளுக்கு மேலும் சந்தேகத்தை வரவைத்து இவரைக் கைது செய்யப்பட்டதாக அப்போது இந்த செய்திகள் ஊடங்களில் வெளியானதாக கூறப்பட் டது.

இந்த காலப்பகுதியில் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தேன். ஊடகத்தில் சமூகவலைத் தளங்களில் வெளிவந்த விபரத்தை நான் குறிப்பெடுத்து எனது குறிப்பேட்டில் எழுதிவைத்த தகவல்களே இது.

தீவுச்சேனையில் இருந்துதான் 2008, ஏப்ரல் கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக மட்டக்களப்பில் பிள்ளையான் போட்டியிட்டார். ஆனால் தொடர்ந்தும் தீவுச்சேனை பிள்ளையானின் கட்டுப்பாட்டில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களுக்கான இரகசிய படைத்தளமாகவும் அது தொடர்ந்தும் செயல் பட்டது.

2015, வரை தீவுச்சேனையில் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளின் பிரசன்னம் இருந்துள்ளது. அந்த காலப்பகுதியில் இடம்பெற்ற முக்கிய படுகொலைகளில் சில.

**1. 2005, பெப்ரவரி 07 லெப். கேணல் கௌசல்யன், மாமனிதர் சந்திரநேரு உட்பட ஏனைய மாவீரர்கள் வெலிகந்தயில் வைத்து சுட்டுக்கொலை.**

**2. 2004, மே 31, சிரேஷ்ட ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் நடேசன் கொலை.**

**3. 2005, ஏப்ரல் 28 தர்மரட்ணம் சிவராம், சிரேஷ்ட ஊடகவியலாளர் கொலை.**

**4. 2005, டிசம்பர் 25, மாமனிதர் ஜோசப் பரராஜசிங்க பாராளுமன்ற உறுப்பினர் கொலை.**

**5. 2006, ஜனவரி 30 தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களான சுரேந்திரன், செல்வி. பிறேமினி, இரவி, வசந்தன் அகியோர் வெலிகந்தயில் கடத்தி தீவுச்சேனையில் கொண்டு சென்றே கொலை.**

**6. 2006, ஏப்ரல், 07, திருகோணமலை மாவட்ட தமிழர் அமைப்பின் உறுப்பினர் விக்கினேஷ்வரன் கொலை.**

**7. 2006, நவம்பர் 10, மாமனிதர் நடராசா ரவிராஜ் பா.உ, கொழும்பில் சுட்டுக்கொலை.**

**9. 2006, டிசம்பர் 15 கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கொழும்பில் கடத்தப்பட்டு தீவுச் சேனைக்கு கொண்டு சென்றதாக கூறப்பட்டது.**

**10. 2007, டிசம்பர் 11 மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரனின் சகோதரர், க.கனகசபையின் மருமகன், ஜெயானந்தமூர்த்தியின் மருமகன், தங்கேஷ்வரியின் செயலாளர் மட்டக்களப்பில் நகரில் பிள்ளையான் குழுவால் கடத்தப்பட்டனர், நாடாளுமன்ற வரவு செலவு தடம் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வேண்டாம் என்ற எச்சரிக்கையாகும்.**

**11. 2008, ஜனவரி 01 ஐ.தே.க, பாராளுமன்ற உறுப்பினர் க.மகேஷ்வரன் கொழும்பில் கொலை.**

**12. 2008, மார்ச் 06 மாமனிதர் கிட்டணன் சிவனேசன் பா.உ, ஏ 9, வீதியில் கிளைமோர் தாக்குதலால் கொலை.**

**13. 2009, மார்ச் 11 வர்ஷா ஜூட் என்னும் 6 வயது சிறுமி, திருகோணமலையில் கடத்தப்பட்டு, கப்பம் கோரப்பட்டு கொலை.**

**15. 2009, ஏப்ரல் 28, சதீஷ்குமார் தினுஷிகா என்னும் 8 வயது சிறுமி, மட்டக்களப்பு, பூம்புகார் என்னும் இடத்தில் வைத்து கடத்தப்பட்டு, கப்பம் கோரப்பட்டு கொலை.**

இப்படி இன்னும் பல படுகொலைகள், கடத்தல்கள் தமிழ் ஆயுதக்குழுக்களால் இடம் பெற்றன. இதில் தீவுச்சேனை முகாமில் இருந்தே திட்டங்கள் தீட்டப்பட்டதாக அந்த காலத்தில் பலராலும் கூறப்பட்டன.

2025, யூலை 29 அன்று, இனிய பாரதியின் இன்னொரு சகாவான வெலிகந்தை தீவுச்சேனையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் சபாபதி என்பவரை மட்டக்களப்பு கிரான்ட் பகுதியில் வைத்து சிஐடியினர் கைது செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடைய சொந்த ஊர் தீவுச்சேனை என்பதால் பல தகவல்கள் வெளிவர சந்தர்ப்பம் உண்டு. பார்ப்போம், என்ன நடக்கும் என்பதை!

## இந்தியாவை கரு . .. தொடர்ச்சி ...

அதிகம், உலகிலேயே மிக உயர்ந்தவை. ரஸ்யாவுடன் நாம் வர்த்தகம் செய்வதில்லை என ட்ரம்ப் தனது சமூகவலைத்தளத்தில் கடந்த புதன் கிழமை (30) தெரிவித்துள்ளார்.

ஆனால் சர்வதேச வர்த்தகம் குறித்த ஐக்கிய நாடுகளின் தரவுகளின் படி, 2024 ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கு ரஷ்யாவின் ஏற்றுமதி $3.27 பில்லியனாக இருந்துள்ளது. 2024-25 நிதியாண்டில், இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் $131.8 பில்லியனை எட்டியிருந்தது.

இதனிடையே ட்றம்பின் வரி விதிப்புக்கள் எதிர்வரும் 2027 ஆம் ஆண்டுக்குள் உலகின் பொருளாதாரத்தில் 2 றில்லியன் டொலர்கள் வீழ்ச்சியை ஏற்படுத்தும் என த புளூம்பெர்க் ஊடகம் இந்த வாரம் தெரிவித்துள்ளது.

## பிள்ளையான் ... தொடர்ச்சி ...

முன்னெடுக்கப்பட்டபோதும் அது பெரியளவில் எடுபடவில்லை.

பிள்ளையானை குற்றச்செயல்களுக்காக பயன்படுத்தியவர்கள் அவரை வெளியில் எடுக்க கடும் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர்.

2025, யூலை, 24, ல், தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையானை விடுதலை செய்ய வேண்டும் என மனுதாரர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வா மற்றும் சட்டத்தரணி உதய கம்மன்பில ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்.

இதன்படி, மனுவைத் தொடர நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளதுடன், அதற்கான அடுத்த விசாரணை திகதியை பின்னர் அறிவிக்க முடிவு செய்துள்ளது.

தேசியமக்கள் அரசானது ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பாக குற்றவாளிகளை விரைவில் அம்பலப்படுத்துவதாக கூறியபோதும் அவர்களால் பிள்ளையானை தவிர உண்மையானவர்களை இதுவரை கைது செய்யமுடியாமல் திண்டாடுகிறார்கள் என்பதே உண்மை.

சில வேளை பிள்ளையான் விடுதலை செய்யும் நிலை ஏற்பட்டால் கிழக்கு மாகாணசபை தேர்தலில் மீண்டும் பிள்ளையானின் கட்சி ஆதரவை பெறக்கூடிய சூழலே காணப்படுகிறது.

பிள்ளையானை கைதுசெய்தாலும் பிள்ளையானை இயக்கிய பெருச்சாளிகள் வெளியில் சுதந்திரமாகவே உள்ளனர் என்பதே உண்மை.

## 40 வருடங்களாகப் ... தொடர்ச்சி ...

குழு ஆயுதப் போராட்டத்தை விரும்புகிறது. ஓர் ஆயுத அமைப்பாக பீகேகே இல்லாமல் போனாலும் கூட, குர்தீஷ் அரசியற் பிரச்சினை மறைந்துவிடாது. இவ்வாறான பிரிவுகளும், குர்தீஷ் அடையாளத்தைப் பேணுவது தொடர்பாக இருக்கும் வெவ்வேறு பார்வைகளும் தொடர்ந்து நிலைக்கத் தான் போகின்றன.

### இது முடிவல்ல. ஒரு படிநிலையே

ஆயுதங்களைக் களைவது என்று பிகேகே எடுத்த முடிவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்த பொழுதிலும், நீண்ட கால உறுதித்தன்மைக்கு அங்கே உத்தரவாதம் இல்லை. வரலாறு நினைவுபடுத்துவது போல குர்தீஷ் பிரச்சினை எந்த நேரமும் மீண்டும் வெடிக்கலாம். இது துருக்கியின் உள்நாட்டு விவகாரங்களில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அதன் நட்புநாடுகளின் கொள்கை மாற்றங்களிலும் பெரிதும் தங்கியிருக்கிறது.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில், தனது செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கு குர்தீஷ் பிரச்சினையை ஒரு துருப்புச் சீட்டாக அமெரிக்கா இதுவரை பயன்படுத்தி வந்திருக்கிறது. ஒருவேளை ஏதாவதொரு கட்டத்தில், அங்கராவுடனான உறவுகளில் விரிசல் ஏற்பட்டால், அதன் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க, குர்தீஷ் மக்களது பிரச்சினையை ஒரு துருப்புச் சீட்டாக அமெரிக்கா மீண்டும் கையில் எடுக்கலாம். பூகோள நிகழ்வுகளைப் பொறுத்து,

சிரியாவிலும் வட ஈராக்கிலும் உள்ள எல்லைகளுக்கிடையேயான பிரிவினைகள் எதிர்காலத்தில் மீண்டும் உறுதியற்ற தன்மையைத் தோற்றுவிக்கலாம்.

அதனால் தான், ஏர்டோகான் அபரிமிதமான நம்பிக்கையைக் கொண்டிருக்கிறாரா என்று சில அவதானிகள் கேள்வி கேட்கிறார்கள்.

எர்டோகானின் அரசியல் முதலீடு, சில முக்கிய வெற்றிகளில் தங்கியிருக்கிறது: பொருண்மியத்தை மீட்டெடுத்தல், அரசியல் யாப்பு மாற்றம், உள்நாட்டில் அரசியலை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல், நாட்டுக்கு வெளியே மூலோபாய ரீதியிலான சமநிலையைப் பேணுதல் போன்ற வற்றைக் குறிப்பிடலாம். அமைதிப் பேச்சு வார்த்தைகளுக்கு, அளவுக்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுக்கும் போது, ஏதாவது தவறு நிகழுமானால், அதன் பாதிப்பு மிகவும் பாரதூரமானதாக இருக்கும். அது தேர்தலில் மட்டும் எதிரொலிக்காது, பன்னாட்டு அரங்கத்திலும் பின்னடைவுகளை ஏற்படுத்தலாம்.

காலம் விரைவாகக் கடந்துகொண்டிருக் கிறது. எர்டோகானின் இறுதி ஆட்சிக்காலம் இன்னும் மூன்று வருடங்களில், அதாவது, 2028 இல் முடிவுறுகிறது. இந்த இடைக்காலத்தில் துருக்கியின் அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்படலாம். பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பூகோள ரீதியிலான பாதுகாப்பிலும் மாற்றங்கள் ஏற்படலாம். எவ்வேளையிலும் மாற்றமடையக்கூடிய இந்தச் சூழ்நிலையில், இன்றைய அமைதி ஒப்பந்தம் எக்கணத்திலும் தன் முக்கியத்துவத்தை இழந்துவிடலாம். அல்லது அதனை உருவாக்கியவர்களுக்கு எதிராகவே திருப்பப்படலாம்.

ஆகவே தான் இந்தக் கணம், வரலாற்று ரீதியாக மிகவும் முக்கியம் வாய்ந்ததாகத் தோன்றினாலும், ஒரு நிரந்தரமான தீர்வாக இருக்க முடியாது. மிகவும் உறுதியான, நிறுவனமயப்படுத்தப்பட்ட ரீதியில், துருக்கி மக்களுடன் இணைந்து வாழ, அதிகமான குர்தீஷ் மக்கள் ஆதரிக்கும் ஒரு கட்டமைப்பு அவசியமானதாகும். அதற்கான உத்தரவாதத்தை தற்போது காணமுடியவில்லை.

**நன்றி: rt.com**

### மீண்டும் புதிய .. . தொடர்ச்சி ...

சமாளித்துக்கொள்வதற்கான ஒரு உபாயமாகவும், இராஜதந்திர மட்டத்தில் ஆட்சியை கவிழ்ப்பதற்கு முனையும் தரப்புக்களை புறநோக்குவதற்கான உபாயமாகவும் இந்தச் செயற்பாட்டை அநுர அரசு மேற்கொள்ளவிருக்கின்றது.

எவ்வாறாயினும், இச்செயற்பாடு அநுர அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தின் இரண்டாம் வருட இறுதியில் அல்லது மூன்றாம் வருட நடுப்பகுதியில் தான் வெளிப்படுத்தப்படவுள்ளது. இந்த தகவலை, நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார, தனது பால்ய நண்பரான தமிழ் அரசியல் தலைவர் ஒருவருக்கு நம்பிக்கையுடன் பகிர்ந்திருக்கின்றார். அத்துடன் தமிழ்த் தரப்பிலிருந்தும் புதிய அரசியலமைப்புக்கான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

எவ்வாறாயினும், கடந்த காலத்தில் ஆட்சிப் பீடங்களில் இருந்த அரசியல் தரப்புக்கள் போன்றே, புதிய அரசியலமைப்புக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவா அல்லது, அரசியலமைப்பு மறு சீரமைப்புக்களைச் செய்வதா என்பதை தெளிவாக வெளிப்படுத்துவதற்கு அநுரவும் அவரது சகோதரர்களும் தயாராக இல்லை.

ஏனென்றால், அவர்களுக்கு இச்செயற்பாட்டை மையப்படுத்திய அரசியல் தந்திரம் உள்ளது. குறிப்பாக இரண்டாவது தடவையும் ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு இருக்கின்ற ஒரேயொரு ‘பிடி’ அரசியலமைப்பு விடயம் தான்.

அந்த அரசியலமைப்பு விடயத்தினை எவ்வாறு தமது இருப்பை நிலைநிறுத்துவதற்காக அதிகாரங்களுடன் கூடியவாறாக எவ்வாறு தகவமைப்பது என்பது அவர்களினது முக்கியமான நோக்கமாகவுள்ளது.

தற்போது கிடைக்கின்ற உள்வீட்டுத் தகவல்களின் பிரகாரம், ஜனாதிபதி அநுரவும், அவரது தாய்வீடான பெலவத்த ஜே.வி.பி.தலைமையகமும் தற்போதிருக்கின்ற அரசியலமைப்பில் மறுசீரமைப்பினைச் செய்வதற்கே தீர்மானித்துள்ளன.

குறிப்பாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கி பாராளுமன்ற பிரதமர் முறைமையை அறிமுகப்படுத்துவது அவர்களின் முதலாவது நோக்கமாக உள்ளது.

அடுத்தபடியாக, உயர்நீதிமன்ற நீதிபதி உட்பட சுயாதீன ஆணைக்குழுக்கள், கணக்காய்வாளர் நாயகம் உள்ளிட்ட உயர் பதவிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆகியவற்றுக்கான நியமனங்களை அங்கீகரிக்கும் அதிகாரத்தினை அரசியலமைப்பு பேரவை கொண்டிருக்கின்றது.

இது அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக தலையிடியாக இருந்துவருகின்ற நிலையில் ‘அரசியலமைப்பு பேரவையின்’ அதிகாரங்களை வலுவிழக்கச் செய்தலும் இரண்டாவது நோக்கமாக உள்ளது.

இதனை விடவும், ‘சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம், உண்மை, மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட விடயங்களையும் அரசியலமைப்பு மறுசீரமைப்பின் ஊடாக கண்துடைப்புச் செய்வதற்கும் நோக்கங்கள் உள்ளன.

மறுபக்கத்தில் புதிய அரசியலமைப் பொன்று கொண்டுவரப்பட வேண்டும் என்ற கருத்துக்களும் தேசிய மக்கள் சக்தியால் தொடர்ச்சியாக ஜே.வி.பிக்கு கூறப்படுகின்ற விடயமாக இருக்கின்றது.

விசேடமாக, ஜனாதிபதி முறைமை, தேர்தல் முறைமை மாற்றம் உள்ளிட்ட விடயங்களை அது மையப்படுத்திய இருக்க வேண்டும் என்ற வாதங்களும் காணப்படுகின்றன.

அதுமட்டுமன்றி, மாகாண சபை முறைமைகளை நீக்க வேண்டும் என்ற நோக்கமும் ஜே.வி.பிக்குள் உள்ள கடும்போக்காளர்களுக்குள் காணப்படுகின்றது.

இதனைவிடவும், ஜே.வி.பியின் கட்சிக் கொள்கைகளை தேசிய கொள்கைகளுக்குள் புகுத்தி அதனை மையப்படுத்தியமாக நாட்டின் அடிப்படையச்சட்டமான அரசியலமைப்புச் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கு நிலைகளும் தாராளமாகவே உள்ளன.

இவ்வாறு தான் ஜே.வி.பி.தலைமையிலான அநுர அரசாங்கமும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகளை அல்லது, அரசியல் மறுசீரமைப்புபணிகளைதமது அடுத்தஆட்சிக்கால நீட்சிக்காகவே பயன்படுத்தப்போகின்றது.

மாறாக, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் முகமாக, வட, கிழக்கு தமிழர் தாயகமாக அங்கீகரிக்கப்பட்டு சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வுடன் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்துவதற்கான எந்த முயற்சிகளும் எடுக்கப்படப்போவதில்லை.

அவ்விதமான நிலையில், அநுர அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்பு செயற்பாடுகளையோ அல்லது அரசியல் மறுசீரமைப்பு நடவடிக்கைகளையோ கையாள்வதற்கு தமிழ்த் தரப்பில் தற்போதே முனைப்பே ஆகக்குறைந்த வியூகமாக இருக்கும்.

• • •

### ஆபிரிக்காவில் .. . தொடர்ச்சி ...

செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. இந்த உள்ளூர் நிறுவனம் கிழக்கு ஆபிரிக்கா நாட்டில் ரோசாட்டமின் யுரேனியம் குழுமத்தின் கீழ் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக செயல்பட்டு வருகிறது.

2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டு, நியோட்டா சோதனைத் திட்டத்தைத் தொடர்ந்து 2029 இல் இயக்கப்படும் பிரதான செயலாக்க வளாகம் இது எனவும், ஆண்டுக்கு 3,000 தொன் யுரேனியம் வரை உற்பத்தி திறன் கொண்டதாக இருக்கும் என்றும் ரோசாட்டம் தெரிவித்துள்ளது.

தான்சானியாவின் தனித்துவமான புவியியல் திறனை வளர்க்க ரோசாட்டம் அதன் மேம்பட்ட யுரேனியம் பதப்படுத்தும் தொழில்நுட்பங்களை வழங்குகிறது. உலகளாவிய அணுசக்தித் துறையில் ஒருங்கிணைப்பை நோக்கி ஒரு முக்கியமான படியை எடுக்க உதவுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம், என்று ரோசாட்டம் தலைமை நிர்வாக அதிகாரிஅலெக்ஸி லிகாச்சேவ் தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்குள் தான்சானியாவில் சுரங்கத்தைத் ஆரம்பிப்பதாக ரோசாட்டம் ஜூலை 2023 இல் தெரிவித்திருந்தது. அதே சமயம் 2029 ஆம் ஆண்டுக்குள் நபிபியாவில் யுரேனியம் உற்பத்தியைத் ஆரம்பிப்பதற்கான திட்டங்களையும் அறிவித்தது, அதன் முதலீடு $500 மில்லியன் வரை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலக அணுசக்தி சங்கத்தின் சமீபத்திய தரவுகளின்படி, ஆப்பிரிக்காவில் முன்னணி யுரேனியம் உற்பத்தியாளராக நமீபியா உள்ளது. அதைத் தொடர்ந்து நைஜர் உள்ளது. தற்போதைய செயல்பாடுகள் ஆரம்பித்தால் ஆப்பிரிக்காவின் மூன்றாவது பெரிய யுரேனியம் உற்பத்தியாளராக தான்சானியா மாறும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த திட்டம் தான்சானியாவின் பிரித்தெடுக்கும் துறை மற்றும் தொடர்புடைய தொழில்களில் கட்டுமானம் மற்றும் செயல் பாட்டு மட்டங்களில் 4,000 க்கும் மேற்பட்ட புதிய வேலைகளை உருவாக்கும். மேலும் இது நம்டும்போ பகுதியில் சாலை வலையமைப்பை மேம்படுத்துவது உட்பட பிராந்திய மேம்பாட்டை ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### அரசியல் கைதி . .. தொடர்ச்சி ...

சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையினை, மனிதாபிமான ரீதியில் முன்னெடுக்குமாறு குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரியுள்ளது.

அத்துடன், பயங்கரவாத தடைச்சட்டம் ஊடாக கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை தொடர்பிலும் அங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், நாட்டில் நடைமுறையில் உள்ள சட்ட கட்டமைப்பின் ஊடாக, குறித்த பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கைதிகளின் பொது மன்னிப்பு சார்ந்த விடயங்கள் ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் வருகின்றமையால், இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் உறுதியளித்தார்.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்



கேப்பாப்புலவில் மதிப்பளிக்கப்பட்ட மாணவர்கள்




அறுகம்குடா

